Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

இலவச பிரதி

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-22 05-06-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 107


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12121)

## தேசியத்தலைவரின் சிந்தனைக்கு அமைவாக உருவாக்கப்பட்ட ஆங்கிலக்கல்வி நிறுவனம்

### தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

(நமதுநிருபர்)

தமிழீழ தேசியத்தலைவர் அவர்களின் சிந்தனைக்கு அமைவாக உருவாக்கப்பட்ட ஆங்கில மொழிக்கல்வி நிறுவனம் இன்று ஒரு வளர்ச்சிப்படியை எட்டியிருக்கிறதென தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஜெயந்திநகர்ப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆங்கில மொழி பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்று வெளியேறிய முதலாவது தொகுதி மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.


உலகில் பெருகிவரும் விஞ்ஞான மற்றும் அறிவியல் வளர்ச்சிக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)





# இந்திய அரசாங்கம் சிறிலங்கா அரசாங்கத்துடன் இராணுவக் கூட்டு ஒப்பந்தம் எதையும் செய்யாது

### இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் வைகோவிடம் உறுதி



(புதுடில்லி)

**இந்திய அரசாங்கம் சிறிலங்கா அரசாங்கத்துடன் எந்த விதமான இராணுவக்கூட்டு ஒப்பந்தத்தையும் செய்து கொள்ள மாட்டாது. அத்துடன் எந்தவிதமான இராணுவ உதவிகளையும் வழங்காது என இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக செயலர் வைகோ இந்தியப் பிரதமரைச் சந்தித்து பேசியபோதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.**



சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியா சென்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து கலந்துரையாடிய பின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை தொடர்பாக நேற்றுப் பிற்பகல் இந்தியப் பிரதமரை வைகோ சந்தித்துப் பேசியுள்ளார்.

இச்சந்திப்பு தொடர்பாக வைகோ கருத்து தெரிவிக்கையில்; சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா மன்மோகன் சிங்கை சந்தித்துவிட்டு சென்றதன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மோட்டார் ஊர்திகள் பதிவுத் திருத்தச் சட்டம் அமுல்

தமிழீழ சட்டவாக்கச் செயலகத்தினால் வெளியிடப்படும் சட்டப்புத்தகமான தமிழீழ மோட்டார் ஊர்திகள் பதிவுத் திருத்தச் சட்டம் இன்று முதல் நடைமுறைக்கு வருவதாக தமிழீழ நீதி நிர்வாகத்துறையின் சட்டவாக்கச் செயலகம் அறிவித்துள்ளது.

## உடுப்பிட்டியில் துப்பாக்கிச்சூடு; முதியவர் ஒருவர் பலி!

(வடமராட்சி)

வடமராட்சி பிரதேசம் உடுப்பிட்டியில் நேற்றுப் பகல் 12.30 மணிக்கு முதியவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வடமராட்சி கொம்மாந்துறை கிராமத்தைச் சேர்ந்த இராஜதுரை தங்கராசா (வயது-60) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டிச் சந்தையில் இருந்து தனது கிராமத்திற்கு பருத்தித்துறை வல்லை வீதி வழியாக துவிச்சக்கர வண்டியில் அவர் சென்றுகொண்டிருந்த போதே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. உந்துருளியில் வந்த இருவர் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக வல்வெட்டித்துறை பொலிசார் தெரிவித்தனர்.

தலை மற்றும் கழுத்துப் பகுதியில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்திருந்ததாகவும் பொலிசார் கூறினர். சம்பவ இடத்திற்குச் சென்ற வல்வெட்டித்துறை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(சு,27,33,கா)

## புலிகளின் வான்படைத் திறனை களைய அமெ.வலியுறுத்தவேண்டும்

### கொண்டலீசாரைஸிடம் கதிர்காமர் கோரல்

(வோஷிங்டன்)

விடுதலைப்புலிகள் வானபடைத் திறனை வளர்த்துக் கொண்டிருப்பது ஏற்கனவே சுனாமி பொதுக்கட்டமைப்பை எதிர்த்து வருவோருக்கு சாதகமாகப் போய்விடும் என சிறிலங்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் வைத்து அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலீசாரைசைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

சனாதிபதி சந்திரிகா இந்தப் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியே தீருவேன் என உறுதியுடன் இருக்

(12ஆம் பக்கம் பார்க்க)

### உருவப்படம் இணைப்பு



தமிழீழப் போராட்டத்தின் முதல்வித்து பொன். சிவகுமாரன் அவர்களின் உருவப்படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## கல்முனையில் இளைஞர் குழுவால் புத்தர்சிலை அடித்து நொருக்கல்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் கல்முனை சிங்கள மகாவித்தியாலய முன்றலில் வைக்கப்பட்டிருந்த மூன்றரை அடி உயரமான புத்தர்சிலை நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் அடித்து நொருக்கப்பட்டது.

பாடசாலை வளவிற்குள் அதிகாலை பிரவேசித்த இளைஞர் குழுவொன்று இதனைச் சேதப்படுத்தியதாகக் கூறப்படுகின்றது.(12ஆம் பக்கம் பார்க்க)

### திலீபன் மருத்துவமனை மூலம் சேவை வழங்கியதற்காக

## தமிழீழத் தேசியத்தலைவருக்கு பாட்டாளிபுரம் மக்களால் நினைவுப்பரிசு

(திருகோணமலை)

திருகோணமலை பாட்டாளிபுரம் கிராமத்தில் வைத்திய வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வந்த மக்களுக்கு உதவுமுகமாக திலீபன் மருத்துவமனையினை ஆரம்பித்து வைத்திய சேவையை வழங்கியமைக்காக அப்பகுதி மக்கள் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களுக்கு நினைவுப் பரிசு ஒன்றை வழங்கி வைத்துள்ளனர்.

தேசியத்தலைவர் அவர்களிடம் கையளிப்பதற்காக இந்த நினைவுப்பரிசினை திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனிடம் கையளித்துள்ளனர். மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் பாட்டாளிபுரத்தில் அமைந்துள்ள தியாக தீபம் (12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

01 ஆம் கட்டை பரந்தனில் வசிக்கும் ஆறுமுகம் உதயகுமாரன், பரமநாதன் கலாராணி என்பவர்களது அடையாள அட்டை, குடும்ப அட்டை, றிசிற் என்பன பாஸ் ஓவிசில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். (6232)

### தவறிவிட்டது

ஜேம்ஸ் மனியல் றொபின்சன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், நிரந்தர பாஸ் என்பன 11.05.2005 அன்று கிளிநொச்சிக்கும், திருநகருக்குமிடையில் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவத்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது புதுக்குடியிருப்பு சுப்பராங் விளையாட்டுக் கழகத்தினிடம் ஒப்படைக்கவும். (6164)

# யுத்த திணிப்பை மரபு வழியில் எதிர்கொள்ள எம் தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவோம்

### –திருமலை துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் அழைப்பு

(திருமலை)

**"யுத்தம் மீண்டும் திணிக்கப்பட்டால் நாங்கள் மரபு வழி யுத்தத்தை நடத்த தலைவரது கரங்களைப் பலப்படுத்துவோம்" இவ்வாறு திருமலை மாவட்ட துணை அரசியல் துறைப்பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்தார்.**

ஒவ்வொரு இளைஞர்களின் வீரச்சாவுகளும் எமது இனத்தின் விடுதலைக்கானது. எமது மாணவர் எழுச்சி நாள் சர்வதேச ரீதியில் குரல் எழுப்பப்பட வேண்டும். எமது எழுச்சி தினத்தை எவரும் அழிக்க முடியாது. யார் அழிக்க நினைக்கின்றார்களோ அவர்களே அழிவார்கள். இத்தினத்தில் தலைவரின் கனவு நனவாக மாணவர் சமூகம் முன்வர வேண்டும் என்று வாகரையில் நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சிப் பேரணி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார். மாணவர் ஒன்றியத் தலைவர் செ.தேவராஜா குரு தலைமையில் கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய செம்மணன் ;

இந்நிகழ்வு ஏன் நடைபெறுகின்றது என்பதனை மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். எமது இனத்தின் விடுதலைக்காக உயிர் நீத்த மாணவர்களை நினைவு கூரும் முகமாகவும் தியாகி பொன்.சிவகுமாரன், மேஜர் முரளி ஆகியோர்கள் எமது இயக்கத்திற்காக ஆற்றிய பணிக்காகவும் தியாகத்திற்காகவும் ஆகும். 31 ஆண்டுகளுக்கு முன்பு தியாகி பொன். சிவகுமாரன் கூறினார் எங்கள் பலமே நாளை விடியல் என்று.

அதே போன்று தனது செயலிலும் காட்டினார். சிங்கள அடக்கு முறையாளர்களுக்கு எதிராகவும் வாழ்ந்து தனது தியாகத்தை நிலைநாட்டினார். கடந்த தமிழ் அரசியல் தலை வர்களின் அகிம்சை வழிப்போராட்டத்தினைச் சிங்கள அரசு மழுங்கடித்தது. அதன் காரணமாக தரப்படுத்தல், மொழி உரிமை ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு மாணவர் எழுச்சிதினம் உருவாக்கப்பட்டது. மாணவர்களின் சக்தி பெறும தியானது.

மாணவர்களே அக்காலத்தில் மறைமுகமாகவும் ஆயுத ரீதியாகவும் விடுதலைக்காக செயற்பட்டனர். எழுபதுகளில் தியாகி பொன். சிவகுமாரன் இரண்டரை வருட காலம் சிறையில் இருந்தார். அவர்தான் "சயனைட்"டையும் எமது இனத்திற்கு அறிமுகப்படுத்தியவர். மேஜர் முரளியும் இவர் வழியினைப் பின்பற்றினார். சிங்கள அரசு சந்திவெளி விவகாரம், புத்தர் சிலை விவகாரம், மாங்கேணி குடியேற்றம் ஆகியவற்றினைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது.

வட கிழக்கை விரைவில் எமது கட்டுப்பாட்டில் கொண்டுவரவுள்ளோம் அதற்காக எங்கள் தலைவர் எம்மோடு உள்ளார். மீண்டும் யுத்தம் திணிக்கப்பட்டால் நாங்கள் மரபு வழி யுத்தத்தினை நடத்த தலைவரது கரங்களைப் பலப்படுத்துவோம் என்றார். வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 16 பாடசாலைகளிலிருந்து மாணவர்கள், ஆசிரியர்கள் மக்கள் எனச் சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# சிறீலங்கா படையினர் இரவில் அட்டகாசம்

(மட்டக்களப்பு)

திருக்கோவில் பிரதேசத்தில் இரவு நேரத்தில் சிறிலங்காப் படையினரின் அட்டகாசங்கள் அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இரவு நேரங்களில் முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டிகளில் செல்வோரைத் தடுத்து நிறுத்தி நீண்ட நேரம் வரை அவசியமற்ற விசாரணைகளை மேற்கொள்கின்றனர். தாங்கள் மீண்டும் இவ்வீதியால் வரும் வரை அவ்விடத்திலேயே நிற்க வேண்டும் எனவும் பணிக்கின்றனர்.

இரவு வேளைகளில் மது அருந்திவிட்டு சிறிலங்காப் படைகள் இவ்வாறான அடாவடிச் செயற்பாட்டில் இறங்கியுள்ளதால் பொதுமக்களின் அன்றாட வேலைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இதேவேளை அக்கரைப்பற்றுப் பகுதியிலும் பகல் நேரங்களில் விசேட அதிரடிப் படையினரின் சோதனை நடவடிக்கை அதிகரித்துக் காணப்படுவதால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்

# இருவேறு இடங்களில் களவாடப்பட்ட உந்துருளிகள் காவல்துறையினரால் மீட்பு

### -சந்தேக நபர்களும் கைது

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ காவல்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் அண்மையில் கிளிநொச்சி மற்றும் புளியம்பொக்கணை ஆலயத்திருவிழாவின் போதும் களவாடப் பெற்ற இரண்டு உந்துருளிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புளியம்பொக்கணை ஆலயத் திருவிழா நிகழ்வின்போது பாதுகாப்பு நிலையத்தில் வைத்து பங்குனி மாதம் 21 ஆம் திகதியன்று களவாடப் பெற்ற சி.டி 100 எஸ்.எஸ் ரக ஹீரோ கொண்டா உந்துருளியை கோணாவில் பகுதியில் வைத்து கடந்தவாரம் காவல்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மீட்டுள்ளதுடன், இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

அதேபோன்று கடந்த மாதம் கிளிநகரிலுள்ள வியாபார நிலையம் முன்பாக வைத்து களவாடப்பட்ட எம்.டி 90 உந்துருளியினை இரணைமடுப் பகுதியில்வைத்து அண்மையில மீட்டுள்ளதுடன் சந்தேகநபர்களையும் மேற்படி காவல்துறை குற்றபுலனாய்வுப் பிரிவினர் கைது செய்து கிளிநொச்சி காவல்பணிமனையினர் மூலம் கிளி. மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# தமிழீழ காவல்துறையின் செயற்பாடுகள் சிறப்பாக அமைந்து காணப்படுகின்றன

### -சர்வதேச செ.ச பிரதிநிதிகள் பாராட்டு

(மட்டக்களப்பு)

மட்டு.அம்பாறை காவல் பணிமனைப் பொறுப்பாளர்களுக்கும் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்குமான சந்திப்பொன்று கடந்த வியாழனன்று காவல் பணிமனையில் காலை 9.00 மணியளவில் இடம் பெற்றது. இச்சந்திப்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதி பற்றிரிக் மட்டு செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி கிஸ்றிலினா ஆகிய இருவரும் மட்டு அம்பாறை காவல்பணிமனைப் பொறுப்பாளர் சுதர்சனம், கரடியனாறு காவல்பணிமனைப் பொறுப்பாளர் உதயசேகரம் ஆகியோரும் கலந்து கொண்டு சுமார் ஐந்து மணி நேரம் கலந்துரையாடினர்.

பின்பு காவல்பணிமனைக் கைதிகளுடனும் செஞ்சிலுவைச் சங்கப் பரதிநிதிகள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், சிறிலங்காப் பொலிசாரைவிட தமிழீழ காவல் துறை சிறப்பாக அமைந்து காணப்படுகின்றது. கைதிகளுக்கான உணவு, உடை, சுகாதாரம், மருத்துவ வசதி, போதிய இடவசதி போன்றன சிறப்பாக அமையப்பெற்றிருக்கின்றது. ஆனால் சிறிலங்கா பொலிஸ்துறையில் இவ்வாறான வசதிகள் எதுவுமின்றியுள்ளது எனத் தெரிவித்தனர்.

# முன்பள்ளி புனரமைப்பு

முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதியுதவியில் முல்லை மாவட்ட மாணவர் அமைப்பினால் முள்ளியவளை பொன்நகர் கிராமத்தில் உள்ள முன்பள்ளி கட்டட புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி முன்பள்ளியில் அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 15 சிறார்கள் கல்வி கற்றுவருவதுடன், மேற்படி முன்பள்ளியில் ஏனைய வகுப்பு மாணவர்களுக்கான மாலை நேரகல்வி வகுப்பும் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. (ஆ)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 28 06 1977

மறைவு: 06 05 2005

அமரர்

## திருமதி ஜெயசுதா அம்பிகைபாகன்

**06.05.2005 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்கிரியைகள் 05.06.2005 ஞாயிற்றுக்கிழமை (இன்று) அவரது இல்லத்தில் நடைபெறும். ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்களைக் கலந்து கொள்ளும்படி வேண்டுகின்றோம்.**

"சதாபவனம்"<br>பாடசாலை வீதி,<br>தாவடி தெற்கு<br>கொக்குவில்.<br>T.P No:-021-2226499 (5380)

தகவல்:-<br>கணவர், பெற்றோர்,<br>சகோதரர்கள், மாமி,<br>மைத்துனர்கள்,<br>மைத்துனிகள்.

# சமாதானமும் அபிவிருத்திக்குமான நிகழ்ச்சித்திட்ட நிகழ்வு

(செட்டிகுளம்)

சமாதானமும் அபிவிருத்திக்குமான நிகழ்ச்சித்திட்ட நிகழ்வின் நான்காம் கட்ட நிகழ்வு கடந்த 31ஆம் திகதி காலை 10.00 மணிக்கு வவுனியா வீரபுரம் முன்பள்ளியில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் தமிழ், முஸ்லிம், சிங்கள மூவினச் சிறுவர்களும்,ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், மற்றும் மூவின மக்களும் கலந்து கொண்டனர். சிறார்களின் விளையாட்டுக்கள், கலாச்சார நிகழ்வுகள், ஆடல, பாடல் நிகழ்வுகள் யாவும் சமாதான அபிவிருத்தியைக் கருப்பொருளாகக் கொண்டதாக அமைந்திருந்தன இச்செயற்பாட்டில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

சீ.எச்.ஏ.நிறுவனத்தின் நிதிப்படுத்தலின் கீழ் வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்நிகழ்வில் மதகுருமார்கள், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர், கலாச்சார உத்தியோகத்தர், செட்டிக்குள பிரதேச கட்டமைப்பு உறுப்பினர்கள் ஏனைய பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தார்கள். குறித்த இந்நிகழ்வானது மதியம் ஒரு மணியளவில் நிறைவுபெற்றது. (21)

# சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உதவியுடன் வெதுப்பக பயிற்சி நிலையம் திறந்து வைப்பு

பொருண்மிய மதியுரையகத்தினால் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் நிதியுதவியுடன் மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கின் இலுப்பைக் கடவைப் பிரதேசத்தில் கடந்த வியாழனன்று காலை 10.00 மணியளவில் வெதுப்பகப் பயிற்சிநிலையம் திறந்து வைக்கபட்டது. இப்பயிற்சி நிலையத்தில் 14-18 வயதிற்குட்பட்ட போரினால் கல்வியினின்று இடைவிலகிய பத்துப் பயனாளிகளும், பெண்களைக் குடும்பத்தலைவிகளாகக் கொண்ட பெண்பயனாளிகள் பத்துப் பேரும் பயிற்சி பெற்றுவருகின்றனர். இத்திறப்பு விழாவின் ஆரம்ப நிகழ்வு மன்னார் மாவட்ட பொருண்மியமதியுரையகத்தின் வெளிக்கள அலுவலகர் சு.ஜசிகரன் தலைமையில் ஆரம்பமாகியது. இதில் மங்கல விளக்கினை கனடா நாட்டின் பொருண்மிய மதியுரையகத்தின் பிரதிநிதி பி.வில்லியம்,பொருண்மிய மதியுரையகத்தின் திட்டமிடல் பிரிவைச் சேர்ந்த ஜெ.ஜெயக்குமார், இலுபபைக்கடவை மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவி திருமதி. விஸ்ணுசுபாஸினி,இலுப்பைக்கடவை கடற்றொழிலாளர் சங்கமுகாமையாளர் செல்வி. ரூபி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து அகவணக்க நிகழ்வு இடம்பெற்றது. இதனை அடுத்து பயிற்சி நிலையத்திற்குரிய பெயர்ப்பலகையினை மன்னார் மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தின் இணைப்பாளர் அ.சிவலிங்கம் திரை நீக்கம் செய்து வைத்தார். பயிற்சி நிலையத்தின் கட்டடத்தினை பொருண்மிய மதியுரையகத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் சி.சுகுணன் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். அதனையடுத்து தலைமையுரை மற்றும் சிறப்புரைகள் இடம்பெற்றன. அதனையடுத்து பயிற்சி ஆசிரியர் க.தங்கவேலுவால் பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. (18)

# சீனாவில் அடைமழை வெள்ளப்பெருக்கு

# 200 பேர் பலி;பல ஆயிரம் வீடுகள் சேதம்



ஈராக்கில் நேற்று முன்தினம் மரணச் சடங்கொன்றில் கலந்து கொண்டுவிட்டு திரும்பும் போது துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த பிரிகேடியர் தரத்திலான இராணுவ அதிகாரியின் உருவப்படத்தை தாங்கியுள்ள ஈராக்கியர் ஒருவர்.

(பீஜிங்)

***சீனாவில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் 200 பேர் வரையில் பலியாகியுள்ளனர். இதன் போது பல கிராமங்கள் அழிந்துள்ளதுடன், பல ஆயிரம் வீடுகள் வரை அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.***

சீனாவின் தெற்குப்பகுதியில் உள்ள ஹியுனான், சிச்சுவான் கெய்ஷு ஆகிய மாநிலங்களில் மூன்று நாட்களுக்கு இடை விடாது மழை பெய்தது. இதனால் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அது கிராமங்களுக்குள் புகுந்து விளைநிலங்களையும், வீடுகளையும் அழித்ததாக தெரிவிக்கப்படுகிறது.


இதனால் ஆற்றங்கரை ஓரங்களிலுள்ள வீடுகள் முற்றிலும் அழிந்தன, மரங்கள் வேரோடு சாய்ந்தன.

வெள்ளப்பெருக்கைத் தொடர்ந்து நிலச்சரிவும் ஏற்பட்டது. இதில் 130 பேர் பலியானார்கள்.


ஹியுனான் மாநிலத்தில் மட்டுமே இறந்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் எண்ணிக்கை 200இற்கும் அதிகமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

ஷின்ஷாவோ மாவட்டம் தான் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு மட்டும் 32 பேர் பலியானார்கள் 45 பேரைக் காணவில்லை.காணாமல் போனவர்களைத் தேடிக்கண்டு பிடிக்கும் பணியில் இராணுவமும், பொலிசாரும் ஈடுபட்டுள்ளனர். 36 ஆயிரம் வீடுகள் இடிந்து விழுந்தன.

ஹியுனான் மாநிலத்தில் மட்டும் 50 லட்சம் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். பல கிராமங்களில் மின்விநியோகம் இல்லை.



பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள், மருந்து, ஆடைகள், மெழுகுவர்த்திகள் ஆகியவற்றை அரசாங்கம் அனுப்பியுள்ளது.




கியூபாவில் முஸ்லிம்களின் புனிதநூலான குர்ஆனின் புனிதத்தன்மையை அமெரிக்கப்படையினர் மாசுபடுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தான்சானியாவில் அமெரிக்காவிற்கு எதிரான சுலோகங்களைத் தாங்கிய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் முஸ்லிம் மக்கள் ஈடுபடுகின்றனர்.

# ஆற்றில் கவிழ்ந்தது பேருந்து பிரேசிலில் 19 பேர் உயிரிழப்பு

அரசுக்குச் சொந்தமான சிறிய பேருந்து ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 19 பேர் உயிரிழந்தனர்.

ஜபோட்டாவ் டாஸ் குரார்ப்பஸ் நகருக்கு அருகே மலைப்பாதையில் பேருந்து சென்று கொண்டிருந்த போது வீதியோர பள்ளத்தில் இறங்கிவிடாமல் இருக்க ஓட்டுநர் முயற்சித்த போது கட்டுப்பாட்டை இழந்து மலையோர சிறிய ஆற்றில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இறந்தவர்களில் மூன்று குழந்தைகளும், பேருந்து ஓட்டுநரும் அடங்குவர். மேலும் மீட்புப் பணியாளர் ஒருவரும் இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

அப்பகுதியில் பெய்த கன மழையும் விபத்துக்கு முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## இந்தோனேஷியா ,ஜப்பானில் லேசான நில நடுக்கம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியா மற்றும் ஜப்பானில் வெள்ளிக்கிழமை அதிகாலை சற்று தீவிரமான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் மக்கள் பீதியும் பரபரப்பும் அடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தோனேஷியாவின் நியாஸ் தீவுப்பகுதியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் கருவியில் 5.6 ஆகப் பதிவாகியிருந்தது.

இது போன்று ஜப்பானின் தென்மேற்குப் பகுதியில் உள்ள கைசு தீவுப்பகுதியில் வெள்ளிக் கிழமை அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ரிச்டர் கருவியில் இது 4.8 ஆகப் பதிவாகியிருந்ததாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தால் சேதம் ஏதும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை

## கூடியிருந்த மக்கள் மீது தாக்குதல் ஈராக்கில் 10 பேர் பலி; பலர் காயம்

(பாக்தாத்)

ஈராக்கில் தற்கொலை படையினர் தாக்குதல் நடத்தியதில் பத்துப் பேர் கொல்லப்பட்டதுடன்,அதற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

பாக்தாத்திற்கு அருகிலுள்ள கிராமத்தில் ஒரு வீட்டில் கூடியிருந்த பொதுமக்களை குறி வைத்து கார்க் குண்டு மூலம் தற்கொலைப் படையினர் இத் தாக்குதலை நடத்தியதாக ஈராக் பொலிசார் தெரிவித்துள்ளனர்.



குண்டுவெடிப்பை தொடர்ந்து தேடுதல் நடத்தும் ஈராக்கிய பொலிசார்.

# மிச்சிக்கன் நகரில் 75 கோடியில் அமெரிக்காவிலேயே மிகப் பெரிய மசூதி

(வோஷிங்டன்)

அமெரிக்காவிலேயே மிகப் பெரிய மசூதி, மிச்சிக்கன் நகரில் 75 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. இரண்டு மாடிகள் கொண்ட இந்த மசூதியின் பிரார்த்தனை மண்டபத்தில் ஆயிரம் பேரும், விருந்து மண்டபத்தில் இரண்டாயிரம் பேரும் இருக்கமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மசூதியின் தொடக்க விழா நேற்று முன்தினம் நடந்தது. அமெரிக்க இஸ்லாமிய மையம் இந்த மசூதியைக்கட்டியுள்ளது. மிச்சிக்கனில் அதிக அளவில் முஸ்லிம்கள் இருப்பதால் இங்கு பெரிய மசூதி அமைவது பொருத்தமானது என்று இமாம் சயீத் ஹாசன் அல் குவாஸ்வினி கூறியுள்ளார்.



மேற்கு ஆபிரிக்க கைற்றோகூனில் உள்நாட்டுப் போர் ஏற்படும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ள நிலையில் அங்கு ஐ.நா. படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## அந்தமானின் ஆளில்ல தீவில் எரிமலை மீண்டும் சீற்றம்

அந்தமான் அருகே ஆளில்லாத தீவு ஒன்றில் எரிமலை மீண்டும் நெருப்பு குழம்பை கக்கத் தொடங்கியுள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுக் கூட்டங்களில் ஆளில்லாத தீவு ஒன்று உள்ளது-அங்குள்ள எரிமலை கடந்த பத்து ஆண்டுகளாக அமைதியாக இருந்தது. கடந்த மாதம் 28 ஆம் திகதி முதல் நெருப்புக் குழம்பை கக்கத் தொடங்கியுள்ளது. கடந்த சில நாட்களாக அந்தமான் பகுதியில் பருவமழை பெய்து வருவதால் எரிமலையின் சீற்றம் சற்று தணிந்திருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் எரிமலை மீண்டும் நெருப்புக் குழம்பைகக்க தொடங்கியுள்ளதாக கடலோர காவல் படையினர் தெரிவித்துள்ளனர்.



தென் கிழக்கு ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படையினரின் வாகனத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் இரு அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டதுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். சம்பவம் இடம் பெற்ற இடத்தை அமெரிக்க படையினர் பார்வையிடுகின்றனர்.

# விடுதலைத்தீயை மூட்டிய வீரன்

நீண்டு செல்கின்ற ஈழத்தமிழர்களின் போராட்ட வாழ்வியல் வரலாற்றில் கடந்து வந்த பாதைகள் மிகக் கடினமானவை கரடு முரடானவை அத்துடன் அற்புத தியாகங்கள் நிறைந்தவை.

அடக்கு முறையை எதிர்கொண்ட தமிழினம் விடிவு பெறத்துடித்த வேளை கலங்கரை விளக்கமாய் பல



நம்பிக்கை நட்சத்திரமாய் விளங்கிய பொன் சிவகுமாரன் என்கின்ற இளைஞனின் பங்கு மிக முக்கியமானது.

இன அடக்கு முறையாளர்களால் பல வழிகளிலும் ஒடுக்கப்பட்டு வந்த ஈழத்தமிழர்கள் தம்மைத் தமது தாயகத்தில் நிலைநிறுத்தி வாழ்வதற்கு உரிமையற்றவர்களாய் மாற்றி வந்த சிங்கள மேலாதிக்க சக்திகளை எதிர்கொள்ள முடியாது தவித்தனர். சனநாயக வழிகளில் தமது உரிமைகளைப்பெற முயன்றவேளை அவர்களுக்கு கிடைத்ததெல்லாம் அடிகளும் உதைகளும் தான் அகிம்சை வழியில் தமது உரிமைகளைப் பெற முயன்ற தமிழர்களின் கோரிக்கைகள் சிங்கள மேலாதிக்க அரசுகளால் துவம்சம் செய்யப்பட்டது.

சிங்கள தேசத்து காடையர்கள் தங்கு தடையின்றி எம்மினத்தை வேட்டையாடினர். இப்படிப்பட்ட அபாயகரமான சூழ்நிலையில்தான் அந்த இளைஞனின் வீரம் நிறைந்த போராட்டங்கள் எம்மினத்தின் வரலாற்றில் பெரும் இடத்தை பெற்றிருந்தது. பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் சிங்கள அரசதலைமைகளின் நடவடிக்கைகளின் ஆபத்துக்கள் பற்றி அவ் இளைஞன் நன்றாகவே அறிந்திருந்தான்.

அவனுக்கு அந்தச் செய்தி எப்படியோகிடைத்திருந்தது. தனது திட்டத்தைத் தீட்டி அதற்கு செயல்வடிவம் கொடுக்க அவ் இளைஞன் முயன்று கொண்டிருந்தான்.

அந்தத்துணை அமைச்சரை வரவேற்பதற்காக அரச சம்பிரதாய ஏற்பாடுகளால் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. குறித்த நேரத்தில் " சோமவீர சந்திர சிறி"என்ற அந்த சிறிலங்கா துணை அமைசசர் அப்பாடசாலை நிகழ் விற்குச்சென்று மீண்டும் திரும்ப ஆயத்தமான வேளை அக்குண்டு திடீரென வெடிக்கிறது. அமைச்சர் மயிரிழையில் உயிர் தப்பினார். அக் குண்டுவெடிப்பு அப்பகுதியை மட்டுமல்ல சிறிலங்கா பேரினவாத சக்திகளையும் அதிர வைத்தது. குண்டுவெடிப்பை நிகழ்த்திய சிவகுமார் என்ற இளைஞன் பற்றி அறிந்து ஈழத்தமிழர்கள் மௌனமாய் மனம் மகிழ்ந்தார்கள். இச் சம்பவம் தான் சிவகுமாரன் சிங்கள அடக்குமுறையினர்களை எதிர்த்து நிகழ்த்திய முதலாவது பெரிய நடவடிக்கை எனலாம். இச் சம்பவம் பற்றி புலன் விசாரணை செய்த சிறிலங்காப் பொலிசார் சந்தேகத்தின் பெயரில் பொன். சிவகுமாரனைக் கைது செய்கின்றனர். எனினும் தகுந்த ஆதாரங்கள் இல்லாமையால் சிவகுமாரன் விடுதலை செய்யப்படுகிறார்.

விடுதலையான பொன்.சிவகுமாரன் தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தத் தொடங்கினார். தனது அடுத்த இலக்காக சிறிலங்கா அரசின் அடிவருடிகளாக இருக்கும் தமிழ் துரோகிகளைத் தெரிவு செய்த சிவகுமாரன், அப்போதைய யாழ். மேயராக இருந்த அல்பிறட் துரையப்பாவின் மீதான தாக்குதலை மேற்கொண்டார். இதில் துரையப்பா தப்பித்துக் கொள்கிறார். கார் பலத்த சேதமடைந்தது.

அடுத்து அரச நிர்வாகமான பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியாகவிருந்த சந்திரசேகரவை இலக்குவைத்து தனது தாக்குதலை மேற்கொண்டார். இக்கைக்குண்டுத் தாக்குதலில் அப்பொலிஸ் அதிகாரி தப்பித்துக்கொள்கிறார். எனினும் தமது நிர்வாகங்களுக்கு எதிராக தமிழினத்தின் இளைஞன் ஒருவன் செயற்படுவதை அறிந்த சிறிலங்கா அரசு விழித்துக்கொண்டது. சிவகுமாரனை இலக்குவைத்து பொலிசாரின் நடவடிக்கைகள் தீவிரமடைந்தன. எனினும் சிவகுமாரனின் போராட்ட நடவடிக்கைகளும் தொடர்ந்தன.

ஒரு முறை சிவகுமாரனை பிடிப்பதற்கான திட்டத்துடன் சிவகுமாரனின் சொந்த ஊரான உரும்பிராய்க்குச் சென்று அப்பகுதிகளில் நூற்றுக்கணக்கான பொலிசார் தேடுதல் மேற்கொண்டனர். எனினும் சிவகுமாரன் பொலிசாரின் கண்களுக்குள் சிக்காமல் தப்பித்துக்கொண்டார். சிவகுமாரனின் வீடு பலமுறை சிறிலங்காப் பொலிசாரின் சோதனைக்குட்பட்டது.



1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஐந்தாம் திகதி சிவகுமாரன் ஒரு தாக்குதல் நடவடிக்கைக்காய் முயன்றுகொண்டிருக்கிறார். அவ் வேளையில்தான் அந்தச் சம்பவம் நடக்கிறது. பொலிசார் அவ்விடத்தைத் திடீரென சுற்றிவளைத்துக் கொள்கின்றனர். சிவகுமாரன் தப்பிச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டுகிறார். அவ்வேளை ஒரு பொலிசாரை சுட்டுக்கொன்று விட்டு தப்பிச் செல்லக் கூடிய நிலை இருந்தாலும் அப்பொலிஸ் இவரிடம் உயிர் பிச்சை கேட்டதனால் இரக்க குணம் கொண்ட சிவகுமாரன் அம் முயற்சியைக் கைவிட்டு பொலிசாரின் சுற்றிவளைப்பிற்கு மீள முடியாது சிக்கிவிட்டார். இந்த நிலையில் தான் உயிருடன் பிடிபடுவதைவிரும்பாத சிவகுமாரன் தான்மறைத்து வைத்திருந்த சயினைட் மருந்தை உட்கொண்டு வீரச்சாவைத் தழுவிக் கொள்கிறார்.

தமது வீரத்தமிழ் இளைஞனை இழந்த ஈழத்தமிழர்கள் தவியாய் தவித்தார்கள். சிறிலங்கா பொலிசாரினது அடாவடிகளுக்கும் மத்தியிலும் தமது வீரனுக்கு மக்கள் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தியதைப் பார்த்த சிங்களதேசம் அதிர்ந்தது. தமிழ் மக்கள் விழிப படைந்து விட்டார்கள் என்ற செய்தியினை சிறிலங்கா ஆக்கிரமிப்புச் சக்திகள் உணர்ந்து கொண்டன.

1950 ஆம் ஆண்டு எட்டாம் மாதம் 26 ஆம்திகதி உரும்பிராய் மண்ணில் உதித்த பொன். சிவகுமாரன் பாடசாலைக் காலத்திலேயே சிறிலங்கா அரச அடக்குமுறைகளை எதிர்த்து வந்திருக்கின்றார். குறிப்பாக சிறிமாவோ பண்டாரநாயக்கவால் அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல் திட்டத்திகெதிராகத் தனது போராட்டங்களை முன்னெடுத்திருந்தார்.

சிவகுமாரன் விடுதலையின் விதையாகி இன்று 31 ஆண்டுகள் கடந்து விட்டாலும் சிவகுமாரன் மூட்டிச்சென்ற விடுதலைத் தீ சுடர் விட்டு பிரகாசித்து எரிந்து கொண்டிருக்கின்றமையை நாம் எமது மண்ணில் காணக் கூடியதாயுள்ளது.

ப. துஸ்யந்தன்

# சுனாமியால் பாதிப்புற்ற சிறுவர்களுக்கான விடுதியமைக்க அடிக்கல் நாட்டல்

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட 250 சிறுவர்களுக்கான புதிய மாணவர் விடுதி ஒன்றினை அமைப்பதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகச் சிறுவர் நலன்திட்டப் பிரிவு ஈடுபட்டுள்ளது.

ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிப்பங்களிப்புடன் நிறுவப்படவுள்ள இந்த மாணவர் விடுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு வைபவரீதியாக கடந்த வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் முல்லைத்தீவிலுள்ள முள்ளியவளை என்னும் இடத்தில் இடம் பெற்றுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சிறுவர் நலன்திட்டப்பிரிவின் ஏற்பாட்டில் அதன்பணிப்பாளர் இ.ரவி தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் ஜேர்மன் தமிழர் புனர் வாழ்வுக்கழகப் பணிப்பாளர் சண்முகரட்ணம் அடிக்கல்லினை நாட்டி வைத்தார்.

# சுனாமியால் பலியான 166 பேரின் சடலங்கள் புகைப்படங்கள் மூலம் இனம் காணப்பட்டன

(மட்டக்களப்பு)

கல்முனைப் பிராந்தியத்தில் சுனாமியால் பலியான 166 பேரின் சடலங்கள் புகைப் படங்கள் மூலம் இனங்காணப்பட்டுள்ளன. கல்முனை மற்றும் மருதமுனைப் பிரதேசங்களில் 924 பேர் சமுகமளித்து தமது இழந்த உறவுகளை இனங்காட்டினர். வவுனியாவை மையமாகக் கொண்டியங்கும் டே் என்ற நிறுவன கல்முனைக் கிளை இனம் காணலை 15 தினங்களுக்கு நடத்தியது. இதுவரை காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு உயிருடன் இருக்கலாம் என்று கருதப்பட்ட 17 பேரின் சடலங்கள் இனங்காணப்பட்டு மரணம் ஊர்ஜிதம் செய்யப்பட்டதோடு அதற்கான பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்விதம் ஊர்ஜிதம் செய்யப்பட்ட 17 பேரில் 8 பேர் சிறுமிகள், 5 பேர் சிறுவர்கள். மூன்று பெண்களும் ஒரு ஆணும் இதில் அடங்குவர். மொத்தமாக 375 புகைப்படங்கள் அங்கு இனங்காணலுக்காக உளவியல் துறையாளர்களால் காட்சிப் படுத்தப்பட்டன. இவற்றில் இனங்காணப்பட்டது போக மீதி 200 புகைப் படங்களை மீண்டும் கல்முனை ஆதார வைத்தியசாலையில் ஒரு வார காலத்துக்கு மீண்டும் காட்சிப்படுத்த உத்தேசித்திருப்பதாக மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் இரா.மனோகரன் கூறினார்.

சுனாமியில் இறந்ததாக கேள்விப்பட்ட 166 பேரது சடலங்கள் உறவினரால் முதடவையாக இனங்காணப்பட்டன. இவற்றில் பெண்கள் 82 பேரும், [illegible]கள் 40 பேரும், சிறுவர்கள் 28 பேரும், ஆண்கள் 15 பேரும் அடங்குவர்.

# அரச வங்கிகளின் பங்குகளை மாற்றும் திட்டத்திற்கு எதிர்ப்பு

(கொழும்பு)

அரச வங்கிகளின் பங்குகளை திட்டமிடப்பட்ட தொழிற்றுறை அபிவிருத்தி வங்கிக்கு மாற்றுவதற்கு நிதி அமைச்சு முயற்சிப்பதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. அகில இலங்கை வங்கிச் சேவையாளர் சங்கம் நிதியமைச்சின் செயலாளர் டீ.ஜெயசுந்தரவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இதற்கு கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளின் போது மக்களிடையே பரவலான கருத்துப் பரிமாற்றம் இடம்பெறவேண்டும் எனவும் ஆட்சியாளர்களின் அவசியத்திற்காக மட்டும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமானால் அதனைத் தோல்வியடையச் செய்யத் தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# பயங்கரவாத தடைச் சட்டத்தை மீண்டும் தீவிரமாக அமுல் செய்க!

ஹெல உறுமய வலியுறுத்து

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மீண்டும் தீவிரமாக அமுல் செய்யப்பட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கேட்டுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகமாநாட்டில் உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கைவகுப்பாளர் சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இராணுவ புலனாய்வுத் துறையின் அதிகாரி முத்தலிப் கொல்லப்பட்டமையை அடுத்து தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையானது புதுமையானதாக உள்ளது என அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய நிலையில் இராணுவ புலனாய்வுப் பிரிவை மீளமைக்க வேண்டும் எனத் தெரிவித்த சம்பிக்க ரணவக்க, சனாதிபதியின் வசம் உள்ள 64 மேலதிக வாகனங்களை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது. மேல் கொத்மலைக்கு எதிரான மக்கள் அமைப்பு இதனை ஏற்பாடு செய்திருந்தது. கோட்டை தொடரூந்து மையத்தின் முன்னால் மாலை 4 மணிக்கு நடைபெற்ற இந்தப் போராட்டத்தில்பெருமளவானோர்கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கலாச்சாரத்தை சீரழிப்போருக்கு எதிராக இனிவரும் காலங்களில் கடும் நடவடிக்கை

## கலாச்சாரத்தைப் பேணும் அமைப்பு எச்சரிக்கை

(தென்மராட்சி)

**சிங்கள இனவாத எதிரிகள் விரிக்கும் வஞ்சகவலையில் சிறைப்பட்ட எமது இனத்தின் இருப்பையும், கலாச்சாரத்தையும் சீரழிப்போருக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்க உள்ளதாக கலாச்சாரத்தைப் பேணும் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

தற்பொழுது யாழ் குடாநாட்டில் அதிகரித்துள்ள குழுமோதல்களின் பின்னணியிலும் எதிரிகளின் அப்பக்கடைகளில் தஞ்சம் புகுந்து அவர்கள் தரும் மது, மாமிச உணவுகள், ஆபாசப் படங்கள் என எதிரிகள் விரித்துவைத்த வஞ்சக வலையில் சிறைபட்டு போயுள்ள நூற்றுக் கணக்கான இளைஞர்கள் எதிரிகளின் தந்திரோபாயங்கள் தெரியாமல் அவர்களுடன் உறவாடுவதையும் எமது கலாச்சாரத்திற்கு ஒவ்வாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் எந்த விதத்திலும் அனுமதிக்கப் போவதில்லை என்றும், எதிரிகளின் அப்பக்கடைகளில் பொழுதைகழிப்போருக்கு எதிராகக்கடும் நடவடிக்கைஎடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(28)

# குடாநாட்டில் விவசாய நிலப்பரப்பு மிக வேகமாக குறைவடைந்து வருகிறது

## -யாழ்.விவசாய திணைக்களம் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் விவசாய நிலப்பரப்பின் அளவு மிகவேகமாகக் குறைவடைந்து வருவதாக யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் நிர்வாக அதிகாரி ஸ்ரீபாலசுந்தரம் கவலை தெரிவித்துள்ளார்.

1985 ஆம் ஆண்டுக்கணக்கெடுப்பின் படி 1,30,131 ஹெக்ரேயராக இருந்த யாழ்.மாவட்டத்தின் விவசாயநிலப்பரப்பின் பரப்பளவு கடந்த ஆண்டில் 8,900 ஹெக்ரேயராக குறைவடைந்துள்ளமையையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறு யாழ்.மாவட்டத்தின் விவசாய நிலப்பரப்பளவு குறைவடைந்திருக்கின்றமைக்கு இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயங்களால்பல விவசாய நிலங்கள் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளமையும், மிதிவெடி அபாயம்மற்றும் நிலம் உவர்த்தன்மையாதல் போன்ற காரணங்களால் பல விவசாய நிலங்கள் நீண்ட காலமாகச் செய்கை பண்ணப்படாதுள்ளமையும் இவற்றுக்கு பிரதான காரணங்கள் என கூறியுள்ள ஸ்ரீபாலசுந்தரம்.

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வரும் சனத்தொகைப் பெருக்கமும், நகரமயமாதலின் வேகமும் இதற்குக் காரணம் என்றும் கூறியுள்ளார். (33)

# யாழ். இல் புகழேந்தியின் ஓவியக்கண்காட்சிக்கு ஏற்பாடு

தமிழக ஓவியர் புகழேந்தியின் "புயலின் நிறங்கள்" ஓவியக்கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நாளைமுதல் ஒன்பதாம் திகதி வரை நடைபெறுவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது. தமிழீழ நுண்கலைக்கல்லூரியினரின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இக் கண்காட்சியானது நாளையும், நாளை மறுதினமும் யாழ்.பல்கலைக்கழகத்திலும், எட்டாம் திகதி வடமராட்சியிலும், ஒன்பதாம் திகதி தென்மராட்சியிலும் நடைபெறவுள்ளது.

# சங்கானையில் 91 வீடுகளை நிர்மாணிக்க ஐ. நா. உதவி

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் இடம் பெயர்ந்த மக்களுக்காக யாழ். சங்கானைப்பகுதியில் 91 வீடுகளை அமைத்துக் கொடுக்க அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரகம் முன்வந்துள்ளது.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலய நடை முறைகள் காரணமாக தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் வாழ்ந்து வருவோருக்காக இந்த 91 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இவற்றில் 31 வீடுகள் பொன்னாலை பகுதியில் இடம் பெயர்ந்து வாழ்ந்து வரும் குடும்பங்களுக்காகவும் 60 வீடுகள் பாண்டு வெட்டைப் பகுதியில் இடம் பெயர்ந்து தற்காலிகமாகத் தங்கியிருக்கும் மக்களுக்காகவும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இவ்வீடுகள் யாவும் அவ்வவ் குடும்பங்கள் தற்போது தற்காலிகமாகத் தங்கியுள்ள பகுதிகளிலேயே அமைக்கப்படவுள்ளன. (33)

# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

யாழ்.சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் இப்பிரதேச அபிவிருத்தித் பற்றி ஆராயப்படவுள்ளது. (33)

# கொடிகாமம்-வரணி மருத்துவமனைகளுக்கு நோயாளர் காவு வண்டிகள் தேவை

(தென்மராட்சி)

கொடிகாமம், வரணி மருத்துவ மனைகளுக்கு நோயாளர் காவுவண்டிகள் வழங்கப்பட வேண்டுமென மருத்துவமனை அபிவிருத்திக்குழுக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களாக இருக்கும் இவ்விரு மருத்துவமனைகளுக்கும் தனித்தனி நோயாளர் காவுவண்டி வழங்க உடன் நடவடிக்கை எடுக்கும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் மாகாண சுகாதார அதிகாரியிடம் மருத்துவமனை அபிவிருத்திக்குழு இக்கோரிக்கையை விடுத்துள்ளது. பொது மக்கள் தரப்பில் இருந்தும் இக்கோரிக்கைகள் பல்வேறுபட்ட தரப்பினருக்கு விடுக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (28)

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச வீதிகள் நீண்ட காலமாக கவனிப்பாரற்ற நிலையில்!

## -பிரதேச செயலர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலிகாமம் தென்மேற்கு பிரதேசத்திலுள்ள வீதிகள் பல நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் இருப்பதாக வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பிரதேசத்திலுள்ள வீதிகளில் 30 வீதிகள் உடனடியாக புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய தேவைகள் உள்ளன. எனினும் இவை நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இதனால் இப்பகுதி மக்களின் வீதிப்போக்குவரத்து செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இது குறித்து மக்களும் தொடர்ச்சியாக முறைப்பாடு தெரிவித்து வருகின்றனர்.

எனவே பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இப்பகுதியில் திருத்தப்படாதுள்ள 30 வீதிகளையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர்மேலும் வலியுறுத்தியுள்ளார். (33)

# அமெரிக்காவிற்கு எதிராக முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

இஸ்லாத்தையும் முஸ்லிம்களையம் அவமதிக்கும் வகையில் செயல்படுவதாக குற்றம்சாட்டி அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷையும், அந்நாட்டு இராணுவத்தையும் கண்டித்து நேற்றுமுன்தினம் மருதமுனைப் பிரதேசத்தில் பாரிய கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கியூபாவில் அமெரிக்க நிர்வாகத்தின் கீழுள்ள குவான்தனமோ அமெரிக்க படைத்தளத்தில் புனித குர் ஆன் அண்மையில் அமெரிக்க இராணுவததினரால் கிளிக்கப்பட்டு மலசல கூடத்தினுள் போடப்பட்டது. இச்செயலை கண்டிக்கும் வகையில் நடைபெற்ற இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தை மருதமுனைப் பிரதேச முஸ்லிம் அமைப்புகளின் ஒன்றியம் ஏற்பாடு செய்தது. நண்பகல் "மஸ்ஜிதுன் நூர்" ஜும்மா பள்ளிவாசலில் ஜும்மா தொழுகையை முடித்துக் கொண்ட பெரும் எண்ணிக்கையான முஸ்லிம்கள் பள்ளிவாசல் முன்றலில் கூடி இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். கண்டன ஆர்ப்பாட்த்தில் கலந்து கொண்டவர்கள் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்யையும் அமெரிக்க இராணுவத்தையும் கண்டிக்கும் வகையில் பல்வேறு வாசக அட்டைகளை ஏந்தியவாறு முழக்கங்களையும் எழுப்பினார்கள். ஆர்ப்பாட்ட முடிவில் அமெரிக்க தேசிய கொடியும், அமெரிக்க சனாதிபதியின் உருவப்படமும் வீதியில் போட்டு ஆர்ப்பாட்டக்காரர்களால் தீ வைக்கப பட்டது.

# திருத்தப்பட்ட ஆசிரியர் சுற்றுநிருபம் தமிழில் வெளிவர வேண்டும்

## த.ஆ.சங்கம் கோரிக்கை

அண்மையில் வெளியான திருத்தப்பட்ட ஆசிரியர் சேவை சுற்று நிருபம் தனிச் சிங்களத்தில் மட்டும் வெளிவந்துள்ளது. உடனடியாகத் தமிழிலும் அச்சுற்றுநிருபத்தை வெளியிட கல்வியமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கல்வியமைச்சின செயலாளர் தாரா டி மெல்லைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1 பரீட்சைக்கு ஆசிரியர்கள் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. அது தொடர்பாக வகை செய்யும் சுற்றுநிருபம் தனிச்சிங்களத்தில் இருப்பதனால் பலருக்கு விடயம் தெரியாமல் இன்றும் பரீட்சைக்கு விண்ணப்பித்து வருகின்றார்கள். மேலும் பல நன்மைகள் ஆசிரியர் சமுதாயத்திற்குக் கிடைத்திருக்கின்றது. அவற்றை திருப்தியாக வாசித்தறிய முடியாத நிலைக்கு தமிழ் பேசும் ஆசிரியர்கள் தள்ளப்பட்டுள்ளனர். எனவே இச்சுற்று நிருபத்தை தமிழில் வெளியிட உடனடி நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தென்மராட்சி கிழக்கிற்கென தனியான பிரதேச செயலகம் அமைக்கக் கோரல்

(தென்மராட்சி)

இருபத்தி எட்டு கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய தென்மராட்சி கிழக்கிற்கு என்று தனியான அனைத்து வசதிகளுடன் கூடிய பிரதேச செயலகம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் படி தென்மராட்சி கிழக்கு அபிவிருத்திக்கான நடவடிக்கைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இப்பிரதேசத்தின் பல்வேறு கிராமங்கள் தமது தேவைகளை நிறைவு செய்யமுடியாது பாரிய பிரச்சனைகளை எதிர்நோக்கி நிற்பதுடன் பரந்த பிரதேசமாகவும், அதிகரித்து வரும் சனத்தொகையையும் கருத்தில் கொண்டும் நிர்வாக வசதிக்காக 60 கிராமஅலுவலர் பிரிவுகளை கொண்ட தென்மராட்சி பிரதேசத்தில் கொடிகாமத்தை பிரதான நகரமாக மையப்படுத்தி தென்மராட்சி கிழக்கிற்கு என்று தனியான பிரதேச செயலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கும் படியும் 15கிராம அலுவலர் பிரிவுகளை கொண்ட காரைநகருக்கு என்று தனியான பிரதேச செயலகமும் தென்னிலங்கையில் எட்டு கிராம அலுவலர் பிரிவுகளுக்கு என்று தனியான பிரதேச செயலகமும் பிரதேசசெயலரும் இருக்கின்ற பொழுது 28 கிராம அலுவலர் பிரிவுகளை கொண்ட இப்பகுதிக்கு உடன் பிரதேச செயலகம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கும்படியும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (28)

# கண்டெடுப்பு

யாழ்.கொடிகாமம் பகுதியில் தேசிய அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தொல்புரத்தை பிறப்பிடமாகவும் குரூபரன் வீதி முழங்காவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகன் தயாரூபன் என்பவரது அடையாள அட்டையே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (33)

# சிறிலங்கா புலனாய்வுத்துறையால் பொதுமக்கள் அச்சுறுத்தல்!

(தென்மராட்சி)

தென்மராட்சிப்பிரதேசத்தில் சிறிலங்காப் புலனாய்வுதுறை என்ற பெயருடன் பொது மக்கள் மற்றும் வர்த்தகர்கள் சிலருக்கு அச்சுறுத்தல் வாசகங்கள், கொலை மிரட்டல்கள் விடுக்கும் கடிதங்கள் கிடைத்திருப்பதாக தெரிய வருகிறது,.

மற்றும் சில குறிப்பிட்ட முக்கிய பிரமுகர்களுக்கு அவர்களுடைய தொலைபேசி ஊடாக கொலை மிரட்டல்கள் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாகவும் தமக்கு கிடைக்கும் அச்சு றுத்தல்கள் குறித்து வெளியில் சொல்ல அவர்கள் பயப்படுவதாகவும் சிலர் நேரடியாகவே சிறிலங்காப் புலனாய்வுத் துறையினரால் அச்சுறுத்தப்பட்டு இருப்பதாகவும் தெரியவருகிறது. (28).

# உந்துருளியில்வரும் திருடர்கள் பெண்களிடம் நகைகள் அறுப்பு

(தென்மராட்சி)

மட்டுவில்,சரசாலை, கல்வயல், பகுதிகளில் தனியாகச் செல்லும் பெண்களிடம் உந்துருளியில் வரும் நபர்கள் சங்கிலிகளை அறுத்துச் செல்வதாக தெரியவருகிறது.

உந்துருளிகளில் வரும் திருடர்கள் முகம் தெரியாதபடி தலைக்கவசம் அணிந்து உள்ளதாகவும் முகவரிகள் கேட்பதுபோல் பாசாங்கு செய்து திடீரென கழுத்தில் கிடக்கும் நகைகளை அறுத்துச் செல்வதாகவும் தொடர்ச்சியாக இப்பிரதேசங்களில் சங்கிலி அறுக்கும் சம்பவங்கள் அதிகரித்திருப்பதாகவும் இது குறித்து பொது மக்கள் விழிப்புடன் இருக்கும் படியும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (28)

# சந்திரிகா–மொறகொட சந்திப்பு

# திஸாநாயக்க விடுதலையாவாரா?

கடந்த 28 ஆம் திகதி இரவு 10 மணிக்கு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விற்கும், ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரும் முக்கியஸ்தருமான மிலிந்த மொறகொடவுக்கும் இடையே சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பு மாலை 7.00 மணிக்கு நடைபெறுவதாக இருந்தது. வழமை போலவே மூன்று மணி நேரம் தாமதித்தே இச்சந்திப்பு ஆரம்பமாகியது.

"இந்தச் சந்திப்புக்கு கோரியதற்கு காரணம் என்ன? " என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேட்டபோது, " பத்திரிகைகளில் படித்திருப்பீர களே" என்று பதிலளித்தார் மிலிந்த மொற கொட.

" இல்லை நான் பத்திரிகைகள் ஒன்றையும் படிப்பதில்லை ஏனென்றால் அவை பொய் களைத் தானே எழுதுகின்றன" என்று கூறினார் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

உண்மையில் சனாதிபதி சந்திரிகா குமார துங்கவை மிலிந்தமொறகொட சந்திக்க விருப் பது குறித்தும் என்ன விடயம் குறித்தும் பேசப் போகிறார் என்பது பற்றியும் சுமார் ஒருமாதங் களுக்கு முன்னரே ஐ.தே.கட்சி ஆதரவுப் பத்திரிகையான "சண்டேலீடரில்" வெளிவந்து விட்டது.




மிலிந்தமொறகொட

அதாவது சனாதிபதி சந்திரிகாவின் முன் னாள் நெருங்கிய சகாவும், இப்போது கடும் விரோதியாகவும் மாறிவிட்ட எஸ்.பி. திஸாநாயக் கவின் விவகாரம் குறித்தே இந்த சந்திப்பிற்கு கோரப்பட்டிருந்தது.

நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு இரண்டு வருடங்கள் சிறைத்தண் டனை விதிக்கப்பட்டுள்ள எஸ்.பி. திஸாநாயக் கவை விடுவிக்குமாறு கோரவே மிலிந்தமொற கொட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்திருந்தார்.

உயர்நீதிமன்றத்தை எஸ்.பி.திஸாநாயக்க அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் உயர் நீதிமன்றமே அவருக்குத் தண்டனை விதித்து விட்டபின் மேன் முறையீட்டுக்கே இடமில்லாது போய்விட்டது.

அவ்வாறாயின் எஸ்.பி.திஸாநாயக்க தண்ட னையை முற்று முழுதாக அனுபவித்து வெளி யேற வேண்டும் அல்லது சனாதிபதி சந்திரி காவிடம் மன்னிப்புக்கோரி அவரது மன்னிப் பைப் பெற்றே சிறையிலிருந்து மீளவேண்டும் என்ற நிலை அவருக்கு ஏற்பட்டது.

ஆனால் இன்று அவரது முதலாவது இலக்க எதிரியாகிவிட்ட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் மன்னிப்புக் கோரி சிறைத்தண் டனையிலிருந்து விடுபட அவர் விரும்ப வில்லை. அதனை வெளிப்படையாகவே அறி வித்தும் விட்டார்.

எனினும் தான் சிறையிலிருக்கும் காலப் பகுதியில் ஐ.தே.கட்சி தனது விடுதலையை முன்னிறுத்தி பல போராட்டங்களை நடத்தும் அதன் மூலம் தனது செல்வாக்கு உயர வேண்டும் என்பது எஸ்.பி.திஸாநாயக்கவின் எண்ணமாகும்.

அவர் இடையில் ஐ.தே. கட்சிக்கு வந்தாலும் அடுத்து வரப்போகின்ற தேர்தல்களுக்கு முகம் கொடுப்பதற்கான உத்திகளை வகுக்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனவே அவரை வளர்த்து விட ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எவரும் விரும்ப மாட்டார்கள். ஆனால் இப்பொழுது எஸ்.பி.

அவருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப் பட்ட ஆரம்பகாலத்தில் அவ்வாறு தான் இருந் தது. ஊர்வலங்கள் தேங்காய் உடைப்புகள் பிரார்த்தனைகள் என்று விறுவிறுப்பான பல போராட்டங்கள் இடம்பெற்றன. ஆனால் அப் பொழுது இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தினால் அவை தடைப்பட்டன. ஆனால் பின்னர் அவை கைவிடப்பட்டவையாகி விட்டன.

இப்பொழுது மீண்டும் போராட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான் எஸ்.பி. திஸாநாயக்கவின் விருப்பமாகும். இப்பொழுதும் கூட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் மன்னிப்புக் கேட்டு வெளியே வரும் நோக்கம் அவருக்கில்லை. அதேவேளை தனது விடு தலை குறித்து ஐக்கிய தேசியக்கட்சி போராட் டம் நடத்துவதற்கு முன்வராததையிட்டு அவர் ஐ.தே.க. மீது கோபம் கொண்டிருக்கிறார்.

ஐக்கிய தேசியக்கட்சியைப் பொறுத்தவரை போராட்டம் நடத்தும் மனப்பாங்கு அதன் தலை மைத்துவத்தில் இருப்போருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இப்பொழுது சனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்த வேண்டுமென வலியுறுத்திப் பல போராட்டங்களை நடத்தி இறுதியில் கொழும்பில் பாரிய போராட்ட மொன்றை நடத்த ஐ.தே.க திட்டமிட்டு வருவ தாகக் கூறப்படுகிறது. அதற்கான ஏற்பாட்டுக் கூட்டங்கள் நடைபெறுவதாகவும் கூறப்படு கிறது. ஆனால் இன்னமும் அந்த நடவடிக்கை கள் முனைப்புப்பெறவில்லை

எனினும் சனாதிபதி சந்திரிகா மற்றுமொரு வருடத்திற்கு தனது பதவிக்காலத்தை நீடிக்கக் கூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்து வைத்திருப்பதும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அடுத்த சனாதிபதி வேட்பாளர் யார்? என்பது குறித்து அறிவிக்காமையும் ஐ.தே.கட்சிக்கு சந்தேகத்தைத் தோற்று வித்திருப்பதால் இந்தப் போராட்டம் குறித்து ஐ.தே.கட்சி கவனமெடுத்து வருகின்றது. இப்போராட்டத்துடன் இணைந்த தாக எஸ்.பி.திஸாநாயக்கவின் விடுதலை தொடர்பாக வலியுறுத்திப் போரட்டங்களை ஐ.தே.கட்சி நடத்துமா? என்பது தெரியவில்லை.

ஆனால் ஐ.தே.கட்சி எஸ்.பி.திஸாநாயக் கவை முன்னிறுத்தி போராட்டங்களை நடத்தி அவருக்கு தனிப்பட்ட ரீதியில் செல்வாக்குத் தேடிக் கொடுக்க விரும்புமா? என்பதும் கேள் விக்குரியதாகும். ஏனெனில் எஸ்.பி.திஸா நாயக்க ஒரு சாதாரண அரசியல்வாதியல்ல.


எஸ்.பி.திஸாநாயக்க

திஸாநாயக்கவைக் கைவிட்டு விடவும் ஐக்கிய தேசியக் கட்சியால் முடியாது ஏனெனில் எஸ்.பி.திஸாநாயக்கவை சந்திரிகா குமாரதுங்க மீண்டும் தன்பக்கம் இழுத்து விடலாம் என்ற சந்தேகமும் ஐ.தே.கட்சிக்கு உண்டு.

எனவே எஸ்.பி.திஸாநாயக்கவுக்காகப் போராட்டமும் நடத்தாமல் அவரைத் தாம் கை விட்டு விட்டதான உணர்வு அவருக்கு ஏற்பட்டு விடாமலும் இருக்க ஐக்கிய தேசியக்கட்சி முயற்சி செய்து வருகின்றது. இதன் காரண மாக நுவரெலியா மாவட்டத்திற்கு வேறொரு அமைப்பாளரை நியமிக்க முடியாத நிலையில் ஐ.தே கட்சி உள்ளது.

அத்துடன் எஸ்.பி.திஸாநாயக்கவின் விடு தலைக்கான முயற்சியில் ஈடுபடுவதற்கு முன் வந்த ஐ.தே.கட்சி மிலிந்த மொறகொடவை தனது பிரதிநிதியாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அனுப்பி வைத்துள்ளது. ஆனால் நேரடியாக சந்திப்புக்கான விடயத்தை கூறத்தயங்கிய மிலிந்த மொறகொட இங்கு ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்ற தொரு உரையாடலை ஆரம்பித்தார்.

ஆனால் இறுதியில் ஐக்கிய தேசியக்கட்சி யின் சார்பில் எஸ்.பி.திஸாநாயக்கவின் விடு தலை தொடர்பான கோரிக்கையை முன் வைத்தார்.

இதற்குப் பதிலளித்த சந்திரிகா குமாரதுங்க எஸ்.பி.திஸாநாயக்க தனது விடுதலை தொடர் பாக எந்தவித கோரிக்கையையும் முன்வைக்க வில்லை எனக்குறிப்பிட்டதோடு ஐ.தே கட்சி அக்கோரிக்கையை முன்வைத்திருப்பதால் அது தொடர்பான நடவடிக்கைகளை மிலிந்த மொற கொடவிடம் தெரிவிப்பதாகவும் கூறியிருக்கிறார்.

அதேவேளை நீதி மன்றத்தீர்ப்பில் நேரடியாகத் தலையீடு செய்ய முடியாது என்றும் படிப்படியாகத்தான் ஏதாவது செய்ய முடியும் என்றும் கூறியிருக்கிறார்.

அதேவேளை சந்திப்பின் ஆரபம்பத்தில் பத்திரிகைகளையேதான் படிப்பதில்லை எனக் கூறிய சனாதிபதி சிறையில் இருக்கும் எஸ்.பி.திஸாநாயக்க சந்திரிகாவைப் பற்றி சிறையில் இருக்கும் காலத்தில் நூல் எழுதப் போவதாக பத்திரிகைகளில் வந்த செய்திகுறித் தும் குறிப்பிட்டிருக்கிறார்.

சந்திரிகா-மிலிந்த மொறகொட சந்திப்பு எஸ்.பி. திஸாநாயக்கவின் தண் டனைக்காலத்துக்கு முன்பான விடுதலைக்கு வழிவகுக்குமா? என்பது ஐயத்துக்குரிய விடயமே. சனாதிபதி தேர்தல் காலத்தில் எஸ்.பி.திஸா நாயக்க வெளியில் இருப்பதை சனாதிபதி சந்திரிகா விரும்ப மாட்டார்.

ஏனெனில் தந்திரம் மிக்க அரசியல்வாதியான அவர் தேர்தல் சமயத்தில் என்ன செய்யக் கூடியவர் என்பதை ஐ.தே கட்சியினரை விட சந்திரிகா நன்கு அறிவார். அத்துடன் அவர் வெளியே வந்து தேர்தல் நடவடிக் கை களில் பங்கேற்றால் ஐ.தே.கட்சி யில் எஸ்.பி. திஸாநாயக்கா வுக்கு செல்வாக்கு அதிகரிப் பதையும் சனாதிபதி சந்திரிகா விரும்பமாட்டார்.

அதேவேளை ஐ.தே.கட்சி எஸ்.பி திஸாநாயக்கவின் விவகாரத்தை போராட்டத்திற் கான ஒரு விடயமாக எடுக்குமாயின் அதனையும் சந்திரிகா விரும்பமாட்டார். ஐ.தே.கட்சியைப் பொறுத்த வரையும் அது தனது ஒரு கடமை முடிந்து விட்டது. அதா வது கட்சியின் கௌரவத்தை விட்டுக் கொடுத்து தனது விடுதலைக்காக கட்சி முயன்றிருக்கிறது என எஸ்.பி.திஸா நாயக்க எண்ணக் கூடிய வகையில் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் ஐ.தே.கட்சியின் இந்தக் கோரிக்கையை ஏற்று எஸ்.பி திஸாநாயக்க முன்கூட்டியே விடுதலை செய்யப்படப்போவதில்லை என்பதே தென்பகுதி விமர்சகர்கள் பலரின் கருத்தாகும். ஏனெனில் சந்திரிகா - எஸ்.பி.திஸாநாயக்கவுக்கிடை யேயான முரண்பாடு அரசியலைக் கடந்து தனிப்பட்ட பகையாக மாறிவிட்டது என்பதே அவர்களின் கருத்தாகும்.

**வேலவன்**

❄ ❄ ❄ ❄ ❄

# பசுமை நகரங்கள்

இன்றைக்கு 4.5 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் பூமி தோன்றியது. 3.5 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் முதல் உயிரினம் கடலில் தோன்றியது. 480 மில்லியன் வருடங்களுக்கு தாவரங்களும் அவற்றைத் தொடர்ந்து 420 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் விலங்குகளும், தரைக்கு முதன் முதல் குடிபெயர்ந்தன. அன்றிலிருந்து இன்றுவரை தாவரங்களும், விலங்குகளும் தமது தொடர்ச்சியான நிலைத்திருப்பிற்காக ஒன்றில் ஒன்று தங்கியே வாழ்கின்றன.



அங்கிக் கூர்ப்பில் மனித இனம் தோன்றும் வரை பூமியில்சிக்கலான சூழலியல் மாற்றங்களோ அல்லது தீங்கு விளைவிக்கக்கூடிய பொருட்கள் பூமியில் விடப்படுதலோ நிகழவில்லை. கூர்ப்பில் மனித இனம் தோன்றிய ஆரம்ப காலத்தில் நாடோடி வாழ்க்கையையே வாழ்ந்து வந்தான் மனிதன். முன்னேற்றமடையத் தொடங்கியபோது குடியிருப்புக்களை அமைத்து வாழத்தொடங்கினான். தனது வாழ்வில் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதன் பொருட்டு இயற்கை வளங்களிலேயே முற்றுமுழுதாக தங்கியிருந்தான். உணவுத் தேவைக்காக விவசாயம் ஆரம்பித்த போது மனிதன் சூழற்செயற்பாடுகளில் தலையிடத் தொடங்கினான். காடுகளை அழித்து சேனைப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டான். தனக்குப் பயன்தரும் விலங்குகளையும், தாவரங்களையும் வளர்க்கவும், பயனற்றவற்றை அழிக்கவும், தலைப்பட்டான்.

18 ஆம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சி, விஞ்ஞான மறுமலர்ச்சி என்பன காரணமாக புதிய கைத்தொழில்களும் தொடங்கின. மருத்துவக்கண்டுபிடிப்புக்களின் காரணமாக மனித வாழ்நாள் அதிகரித்தது. இறப்பு வீதம், சிசுமரண வீதம் குறைவடைந்தது. சனத்தொகை அதிகரிப்பு விளைவாகியது. சனத்தொகை அதிகரிப்பின் காரணமாக உணவுத்தேவை, வாழ்விடத்தேவை அதிகரிக்கத் தொடங்கியது. இதனை நிவர்த்தி செய்ய மனிதன் காடுகளை அழித்து உணவு உற்பத்திக்காக விவசாய நிலங்களாகவும், குடியிருப்புக்கான நிலங்களாகவும் பயன்படுத்தத் தொடங்கினான். கிராமங்கள் நகரங்கள் ஆகின. மனிதனின் வாழ்க்கைப் போக்கில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. தேவைகள் அதிகரித்தன. இயற்கை வளங்களின் பயன்பாடு அதிகரித்தது. சக்தி நுகர்வு அதிகரித்தது. இயற்கை வளங்களையும், மாற்று சக்தி மூல வளங்களையும் கண்டறிய வேண்டி நேரிட்டது. பயன்பாடு அதிகரித்தமையால், சூழலுக்கு விடப்படும் பொருட்களின் அளவு அதிகரித்தது. சூழலில் விடப்பட்ட பொருட்கள் காரணமாகவும், சூழலில் சிக்கல் தன்மை குறைவடைந்து சென்ற அதே வேளை, பூமியின் மேற்பரப்பைச் சூழ போர்வையாகக் காணப்படும் வளிப்படையின் வெப்பநிலை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. வளிப்படையின் வெப்பநிலை அதிகரிப்பு முழுவுலக வெப்பமுறல் (global worming) இதற்குக் காரணமாகியது.

வளிமண்டலத்தின் குறித்த அளவில் காணப்படும் பச்சை வீட்டுவாயுக்கள், (காபனீரொட்சைட்டு குளோபுளோரோ காபன்கள், மெதேன், நைதரசன், ஒட்சைட்டுக்கள், ஓசோன்) சூரியனிலிருந்து புவியை அடைந்து புவி மேற்பரப்பில் பட்டுத்தெறிக்கும் ஒளிக்கதிர்களின் ஒரு பகுதியை உறிஞ்சிக்கொள்வதால் புவி மேற்பரப்பு குறித்த வெப்பநிலை பேணப்பட்டு வருகிறது. இவ் வெப்பநிலை பூமியில் அங்கிகள் வாழவும், சூழலியற்செயற்பாடுகள் சீராக நடைபெறவும் அவசியமானதாகும்.

காடுகள் வளிமண்டலத்தை தூய்மையாக்குவதிலும், உயிரினங்களின் சுவாசத்திற்குத் தேவையான ஒட்சிசனை வழங்குவதிலும் பங்கு வகிக்கின்றன. தரையில் காடுகள் வகிக்கும் பங்கினை, நீரில் பச்சை அல்காக்கள் உட்பட ஒளித்தொகுப்புச் செய்யும் உயிரினங்கள் வகிக்கின்றன. வளிமண்டலத்தில் அங்கிகளின் சுவாசத்தினால் விடப்படும் காபனீரொட்சைட்டு வாயுவை இவை ஒளித்தொகுப்பிற்காக பயன்படுத்தி ஒட்சிசன் வாயுவை வெளிவிடுகின்றன. இதனால் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டு வாயுவினளவு அதிகரிக்காமல் பேணப்பட்டு வருகின்றது.

காடழிப்பு, சுவட்டு எரி பொருட்களின் பாவனை, தகனம், அணு உலைகள், போர் என்பன காரணமாக வளிமண்டலத்தில் பல்வேறு வாயுக்கள் விடப்படும் அதே வேளை பெருமளவு வெப்பமும் சூழலுக்கு விடப்படுகின்றது.

இவ்வாறு வெளிவிடப்படும் வாயுக்களில் பச்சைவீட்டு வாயுக்கள் உட்பட பல்வேறு வாயுக்கள் அடங்குகின்றன. இத்தகைய பச்சை வீட்டு வாயுக்களின் அளவு வளிமண்டலத்தில் அதிகரிப்பதனால் புவி மேற்பரப்பில் பட்டுத்தெறிக்கும் சூரிய ஒளிக்கதிர்கள் உறிஞ்சப்படும் அளவு அதிகரிக்கின்றது. இது புவி மேற்பரப்பின் வெப்பநிலை அதிகரிக்க ஏதுவாகின்றது.

சுவட்டு எரிபொருட்களின் தகனம் காடழித்தல் போன்ற செயற்பாடுகள் நாம் இன்று அனுபவிக்கும் வாழ்க்கையின் பண்பு, காலநிலை சூழல் என்பவற்றிற்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய அபாயகரமான அளவில் பச்சைவீட்டு வாயுக்கள் வெளியிடப்படுவதற்கு உதவுகின்றது.

* 1750 ஆம் ஆண்டளவில் 280 PPm ஆக காணப்பட்ட காபனீரொட்சைட்டின் அளவு 2000 ஆண்டில் 360 PPm இற்கு உயர்வடைந்துள்ளது.

* 20 ஆம் நூற்றாண்டு வரை பூமியின் மேற்பரப்பில் சராசரி வெப்பநிலை ஏறத்தாழ 0.6 °c ஆல் உயர்வடைந்துள்ளது.


* கடந்த 40 வருடங்களில் பூமியை அண்மித்த வளிமண்டலத்தில் ஏறத்தாழ 8 km உயரம் வரை வெப்பநிலை அதிகரிப்பு பரவியுள்ளது.

* 10 வீதம் வரையான பனிப்பாறைகள் 1960 களின் பின் உருகி விட்டது.

* 2100 இல் பூமியின் வளிமண்டலத்தின் சராசரி வெப்பநிலை 1-3.5 °c ஆல் உயர்வடையக் கூடும். அவ்வாறே கடல் நீர் மட்டம் 15-95 cm வரை உயரக்கூடும்.

சனத்தொகை அதிகரிப்பு, காடழித்தல், நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி, நகரமயமாக்கம் 'பாலை வனமாதல்' மனிதனின் வாழ்க்கைப் போக்கில் மாற்றம் போன்ற தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றதும், மாறிவருகின்றதுமான காரணிகளுக்கிடையில் சூழலையும், அதற்குச் சொந்தமான வரையறுக்கப்பட்டதுவும், அதிகரித்துச் செல்வதுமான இயற்கை வளங்களை உறுதிமிக்க வகையில் பாதுகாத்துக்கொள்வதில் தீவிர சவால்கள் உருவாகியுள்ளன. உயிரினங்களுக்கும் மனிதனின் நல்வாழ்விற்குமான அடிப்படை அத்தியாவசிய உயிரற்ற வளங்களான வாயு, வெப்பம் ஆகியவற்றுக்காக தூய்மையான வளிமண்டலத்தையும், அளவுத்தரமிக்க நீர் வளங்களையும், மாசற்ற புவியையும், பாதுகாத்துப் பேணி வர வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

1992 இல் பிறேசில் நாட்டில் றியோடி ஜெனிரோ நகரத்தில் இடம் பெற்ற புவி பற்றிய உச்சிமாநாட்டில்



உலகத் தலைவர்களால் 21 ஆம் நூற்றாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட சட்ட வாக்கத்திலும், மேற்படி விடயம் மீது தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சிக்கல்களின் சிருஷ்கர்த்தா மனிதன் அத்தகைய சிக்கல்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதிலும் மனிதன் பெரும் பங்களிப்பினை ஆற்ற வேண்டும். மக்களின் பங்களிப்புடன் புவிக்கோளினை காப்பதற்காக 1972 இல் ஐக்கிய நாடுகள் சுற்றாடல் செயற்திட்டம் (UNEP) உருவாக்கப்பட்டதுடன் உலக சுற்றாடல் தினம் ஒவ்வோர் கருப்பொருளின் கீழாக ஒவ்வோர் வருடமும் ஜூன் 5 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இக்கருப்பொருளினை அடைவதற்காக பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். இவ்வருடம் ஜூன 5 ஆம் திகதி சான்பிரான்சிஸ்கோ நகரில் பசுமை நகரங்கள் என்னும் தொனிப்பொருட்களில் புவிக்கோளினை காப்பதற்கான திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இவ்வருட உலக சுற்றாடல் தினம் பின்வரும் குறிக்கோள்களை அடைவதற்காக கொண்டாடப்படுகிறது.

1.நீடித்து நிலை பெறத்தக்க அபிவிருத்தியில் உயிர்ப்பான பங்காளிகளாக மக்கள் செயற்பட வலுவூட்டல்.

2. சுற்றாடல் சார்பான பிரச்சினைகளுக்கு ஏற்ப மனப்பாங்குகளை மாற்றுதலில் மைய அச்சாக இருப்பதை புரிந்து கொள்வதனை முன்னேற்றுதல்.

3.எல்லா நாடுகளிற்கும் மக்களிற்கும் பாதுகாப்பான ஆரோக்கியமான எதிர்காலத்தை உறுதிப்படுத்துமாறுள்ள பங்காளிகளை வலுப்படுத்தல்.

இத்தகைய குறிக்கோள்களை அடைவதற்காக

*சூழல் நட்புள்ள வாகனங்களை பயன்படுத்தல் / அதிக புகைவிடும் வாகனங்களை ஒதுக்குதல்.

*வாகனங்களிலிருந்து வெளிவரும் விளைவுகளைக் குறைத்தல்.

* சூழலில் விடப்படும் பொருட்களின் மீள் சுழற்சியை அதிகரித்தல்.

சூரிய சக்தி, காற்று என்பனவற்றை சக்தி மூலவளங்களாக பயன்படுத்தலை ஊக்குவித்தல்.

சூழல் கிராமங்களை (Ecovillages) அமைத்தல்.

பசுமைக் கட்டடங்கள் அமைத்தல்.

மரங்களை நாட்டுவதன் மூலம் சுற்றாடலை பசுமையாக்கல்.

பல்வேறு செயற்பாடுகளினால் சூழலில் விடப்படும், பூமியை



வெப்பமடையச் செய்யும் வாயுக்களை குறைத்தல் / இல்லாது செய்தல்.

தமிழர் தாயகத்தில் தமிழீழ வன வளப் பாதுகாப்புப் பிரிவினரால் மீள்வனமாக்கல் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இராணுவத்தினமிடமிருந்து மீட்கப்பட்ட தாயகப்பிரதேசமெங்கும், மீள் வனமாக்கல், மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வருடம் அன்னை பூபதியின் நினைவு நாளன்று சூழலைக் காப்பதற்கான விழிப்புணர்வு செயற்றிட்டம் மரநடுகை மூலம் ஆரம்பிக்கப்பட்டது. எதிர்கால சந்ததி வாழ்வதற்கான சூழலை பாதுகாக்க வேண்டிய பொறுப்பிற்காக இன்றைய நாளில் நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

மு.ரவீந்திரன்,
உதவிக்கல்விப்பணிப்பாளர்,
கிளிநொச்சி

## “சோஆ” நிறுவனத்தில் இயந்திரம்மூலம் கல்அரிவதற்கு தொழிலாளர் தேவை

மேற்படி எமது நிறுவனம் சுனாமிப் பேரலையினால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவும் வகையில் பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. அதன் நிமித்தம் கல் அரியும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கான தொழிலாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். விரும்பியோர் மேற்படி எமது நிறுவனத்துடன் 09.06.2005 வியாழக்கிழமை காலை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- தொழில் நிரந்தரமானது.
- வேலை செய்யும் இடம்-இயக்கச்சி.
- சம்பளம்பேசித்தீர்மானிக்கப்படும்.
- எல்லா இடங்களில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- ஒருவரோஅல்லது ஒரு குழுவாகவோ விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:-

முகாமையாளர், “சோஆ”
நிறுவனம்,
கண்டிவீதி,
கிளிநொச்சி.

(சி.12171)

## கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன்

பதிவுஎண்:-பி.ஏ.047 திகதி:-1971.02.10

## பகிரங்க ஏல விற்பனை

*2005-06.18*

### கழற்றப்பட்ட இசூசு (ISUZU) பாரவூர்தி உடற்கோப்பு

பாவனையிலிருந்த இசூசு பாரவூர்தியின் கழற்றப்பட்ட உடற்கோப்பு நல்ல நிலையிலுள்ளது. இவ் உடற்கோப்பினை 2005.06.18 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்பியவர்கள் தலைமை அலுவலகத்தில் ரூபா ஐந்நூறு (500/=) செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2005.06.13 ஆம் திகதி தொடக்கம் பரந்தன் சந்தியிலுள்ள எமது தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

*தலைவர்,*
*கரைச்சி வடக்குப் பலநோக்குக்*
*கூட்டுறவுச்சங்கம்.*
*பரந்தன்.*

(சி.12177)

# FORUT Campaign for Development & Solidarity

**AN ORGANISATION PROMOTING ALCOHOL, DRUG , AND SMOKE FREE ENVIRONMENT**

## VACANCY Announcement – Position : Documentation Officer

**FORUT**, an international NGO working in Sri Lanka since 1982, is inviting applications from qualified and experienced personnel to work with the poor and affected population to uplift their living status, by adopting participatory working methods. The candidates are expected to be team workers, who could work with the project teams to increase the efficiency and effectiveness.

| Minimum Requirements | Tasks |
|---|---|
| • GCE(A/L) Qualified /Graduate<br>• Excellent proven command of English and Tamil, preferably some knowledge of Sinhala<br>• .Excellent proven computer skills.<br>• 2 years experience in writing documents and reports<br>• Ability to conduct research and report.<br>• Ability to gather and transmit information and information management<br>• Age 25-35 years | • Maintain databank on complete programme.<br>• Net working , record keeping, & data base management<br>• Produce monthly / Quarterly/Half-yearly/Annual reports<br>• Visit field and document information as case story or report<br>• Publish newsletter routinely to carry project information<br>• Document workshops, seminars and reviews<br>• Write minutes / reports |

**Females are encouraged to apply**. Duration of contract will be one year with possible extensions depending on availability of funds and staff performance. **Only short listed candidates will be called for interview.**


Completed applications should be forwarded to reach Programme Manager, FORUT Vanni, 155th Mile Post,Jaffna-Kandy Road, Kilinochchi **on or before 20 June 2005**.

E-Mail :- arne@forut.lk

(சி.12169)

# எங்கள் துயரத்தை வெளிப்படுத்திய அரச அதிபரைப் பாராட்டுகின்றோம்

சுனாமிப் பேரலைகளால்
அழிந்த முல்லைத்தீவின்
அவலநிலையையும் மக்களின்
துயரத்தையும் உலகிற்கு
வெளிப்படுத்தும் வகையில்
கண்டியில் நடைபெற்ற உதவி
வழங்கும் நாடுகளின் கூட்டத்தில்
தனக்கு வழங்கப்பட்ட குறு
நேரத்தில் முழுமையான
அவலத்தையும் எடுத்துரைத்து
அனைவரது கவனத்தையும்
ஈர்த்த முல்லை மாவட்ட அரச
அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்
அவர்களின் பணிதொடர
வாழ்த்துகிறோம்.



முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், அதன்
கிளைச் சங்கங்களும்,முல்லை வர்த்தகர்களும்.

(சி.12033)


# ஜெயலலிதாவின் பூச்சாண்டிக்கு அஞ்சமாட்டோம்

## எந்த வழக்கையும் சந்திக்கத் தயார்

ஜெயலலிதாவின் பூச்சாண்டிக்கெல்லாம் அஞ்சமாட்டோம். எந்த வழக்கையும் சந்திக்கத்தயார் என்று தனது பிறந்த நாள் கூட்டத்தில் கருணாநிதிபேசியுள்ளார்.

தி.மு.க தலைவர் கருணாநிதியின் 82 ஆவது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் தென்சென்னை மாவட்ட தி.மு.க சார்பில் அமைந்தகரையில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்துகொண்டு தி.மு.க தலைவர் கருணாநிதி பேசியதாவது; நான்கு ஆண்டுகள் எந்த வழக்கும் தொடரப்படவில்லை. இப்போது ஏன் தொடரப்படுகிறது. வெகு விரைவில் சட்டப் பேரவைத் தேர்தல் வரப்போகிறது. எனவே மக்களைத் திசை திருப்ப வழக்குப் பூச்சாண்டி காட்டுகிறார்கள். அந்தக்காலத்தில் பாதுகாப்புச் சட்டப்படி தொடரப்பட்ட வழக்கையே பார்த்தவன் நான். பாளையங்கோட்டை தனிமைச்சிறையில் இரண்டு மாதம் இருந்தேன். ஜெயலலிதா போல ஊழல் வழக்கில் சிறை சென்றவர்கள் நாங்கள் அல்ல. அவரைக் கைதுசெய்யக்கூட நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. அவராகவேமுன் ஜாமீன் கேட்டு நீதிமன்றம் சென்றார். நீதிமன்றம் கூறியபிறகே கைது செய்யப்பட்டார். அதுவும் பூசையை முடித்துவிட்டு வரும் வரை காத்திருந்து கைது செய்தனர். அவரை அழைத்துக்கொண்டு சென்றனர். என்னை நள்ளிரவில் படுக்கை அறையில் இருந்து இழுத்துக்கொண்டு சென்றனர். மேலும் வழக்குப்போடுவதாக மிரட்டுகிறார்கள். அதற்கு நாங்கள் அஞ்சவில்லை. இவர் சந்தித்த வழக்கு எப்படிப்பட்டவை. டான்சி வழக்கில் நீதிபதியின் கருத்துக்கள் தண்டனையை விட மோசமானவை. தனது மனச்சாட்சிக்கு மதிப்பளித்துப் பிராயச்சித்தம் தேடிக் கொள்ள வேண்டும் என்று நீதிபதி கூறினார். மனச்சாட்சி இருந்தால் தானே மதிப்பளித்து பிராயச்சித்தம் தேடிக் கொள்ளமுடியும்.

திருடியது உண்மை. திருப்பித் தந்தால் விடுதலை என்றுதான் கூறினார்கள். இவரை நேர்மையின் சிகரம் என்று நற்சான்று பத்திரம்தந்தா விடுதலை செய்தார்கள்? நீதிமன்ற கருத்துக்களையும், நீதிமன்றங்களைக் கால்தூசிக்கு சமமாக ஜெயலலிதா அரசு மதிக்கிறது. நல்ல விழாவில் அதைப் பேசலாமா என்று கேட்கலாம். பொங்கல் நல்ல விழா தான். ஆனால் அதற்கு முந்தைய தினம் அழுக்குகளை எல்லாம் அகற்றவில்லையா. அதுபோலத்தான் இதுவும். நீதிமன்றங்களுக்கு கௌரவம், நீதி வழங்கும் உரிமை இருக்கிறதா? என்று பார்க்க வேண்டும் என ஆக்ரோசமாகப் பேசினார் கருணாநிதி.



## பிரதமர் மன்மோகன்சிங் அமெரிக்கா செல்கிறார்

அமெரிக்க அதிபர் புஷ் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை அமெரிக்காவுக்கு வருமாறு அழைத்ததையடுத்து அவரது அழைப்பை ஏற்று மன்மோகன்சிங் வரும் ஜுலை மாதம் மூன்றாம் நாள் பயணமாக அமெரிக்கா செல்ல இருக்கிறார். ஜுலை 18 ஆம் திகதி அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் அவர் அமெரிக்க அதிபர் புஷ்சைச் சந்தித்துப் பேச இருக்கிறார். மத்திய அரச அதிகாரிகள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

# தாய்லாந்துப் பிரதமர் இந்தியா சென்றார்


ஒரு நாள் பயணமாக இந்தியா சென்ற தாய்லாந்துப்பிரதமர் டில்லியில் மன்மோகன்சிங்கைச் சந்தித்தார்.

தாய்லாந்துப் பிரதமர் தக்சின் ஷினாவத்ரா நேற்று முன்தினம் டில்லி சென்றார். விமான நிலையத்தில் அவரை வெளியுறவு இணை மந்திரி அகமது கைகுலுக்கி வரவேற்றார்.

நேற்று முன்தினம் மாலையில் அவர் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியைச் சந்தித்துப் பேசினார். அப்போது அவர்கள் இரு நாட்டுப் பிரச்சினைகள் பற்றிக் கருத்துப் பரிமாறினர்.

பின் பிரதமர் மன்மோகன்சிங்கைத் தாய்லாந்துப் பிரதமர் சந்தித்துப் பேசினார். அப்போது அவர்கள் இருநாட்டுப் பிரச்சினை, பிராந்தியப் பிரச்சினை, சர்வதேச பிரச்சினை ஆகியவை பற்றிப் பேசினார். மேலும் பாதுகாப்பில் ஒத்துழைப்பு, வர்த்தகம், பொருளாதாரம்,கலாச்சாரம்,கல்வி சுற்றுலா, விமானப் போக்குவரத்து. விஞ்ஞானம்-தொழில்நுட்பம், ஆகியவை பற்றியும் பேசினர்.

மனிதவள மந்திரி அர்ஜுன் சிங், தாய்லாந்துப் பிரதமரைச் சந்தித்துப் பேசினார். அப்போது கல்வியாளர்,மாணவர்கள் பரிமாற்றம் பற்றி உடன்பாடு கையெழுத்தானது.



தாய்லாந்துப் பிரதமர் தக்சின் ஷினாவத்ராவை நேற்று முன்தினம் டில்லி விமான நிலையத்தில் இருந்து இந்தியமத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் அகமது வரவேற்று அழைத்துச் சென்ற காட்சி.

# இந்திய உயர் தலைவர்களுக்கு புதிய விமானங்கள்

இந்தியப் பிரதமர், சனாதிபதி, துணை சனாதிபதி ஆகிய, நாட்டின் உயர் பதவிகளை வகிப்பவர்களின் பாதுகாப்புக் கருதி அவர்களின் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயணங்களுக்கு ஆறு புதிய விமானங்களை வாங்க இந்திய மத்திய அரசு முடிவு செய்தது.

இதில் இரண்டு ஏம்பரர் விமானங்களும் இரண்டு போயிங் விமானங்களும், பிரதமர், சனாதிபதி, துணை சனாதிபதியின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணங்களுக்காகப் பயன்படுத்தப்படும். மீதமுள்ள இரண்டு விமானங்கள் மேலதிகமாக இருக்கும்.

மேற்கண்ட விமானங்கள் வாங்குவதற்கான நிதியை மத்திய நிதி அமைச்சகம் ஒதுக்கியிருக்கிறது. விமான விலையைப் பேரம் பேசுவதற்கான வேலையில் அரசஅதிகாரிகள் விரைவில் ஈடுபடவுள்ளனர்.

இவ்வாறு விமானங்கள் வாங்குவதற்கான திட்டம் இதற்கு முந்தைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசிலேயே தீட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜப்பான் மாநாட்டிற்குச் செல்கிறார் இந்திய மத்திய அமைச்சர் ராசா

ஜப்பான் நாட்டின் ஜி:.பு நகரில் இன்று தொடக்கம் 6ஆம் திகதி வரை நடைபெறும் ஆசிய பசுபிக் நாடுகளுக்கான 13 ஆவது சுற்றுச் சூழல் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்திய மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் ஆ.இராசா டோக்கியோ செல்கிறார். மாநாட்டில் ஆ.இராசா பேசுகிறார். இந்தியாவில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு முயற்சிகள் குறித்து இம்மாநாட்டில்கலந்துகொள்ளும் மற்றும் சுற்றுச் சூழல்துறை அமைச்சர்களுடன் ராசா கலந்துரையாடுவார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளில் நாம் அடைந்திருக்கும் முன்னேற்றம். மேலும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அப்போது விவாதிக்கப்படும்.

ஆசிய பசுபிக் நாடுகளின் சுற்றுச் சூழல்துறை அமைச்சர்கள், உயர் அலுவலர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றனர். இந்தியாவின் சார்பாக அமைச்சர் ராசா தலைமையில் உயர்மட்ட குழு இம்மாநாட்டில் பங்கேற்கிறது. மாநாட்டின்ஒரு பகுதியாக ஜப்பான் நாட்டின் சுற்றுச் சூழல் துறை உலகளவிலான சுற்றுச் சூழல் பாதுகாப்பு கண்காட்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

# பஸ்வானின் கட்சியிலிருந்து வெளியேறியோருக்கும் எமது கட்சியில் இடம் ஒதுக்கவுள்ளோம்

### நிதிஷ்குமார்

நடக்கவிருக்கும் இந்திய பீகார் மாநில சட்டசபைத் தேர்தலில் பஸ்வானின் கட்சியிலிருந்து அதிருப்தியுற்று வெளியேறியோருக்கும் தாம் இடம் வழங்கத் தயாராக உள்ளோம் என நிதிஷ்குமார் அறிவித்துள்ளார்.

ஐக்கிய ஜனதாதள கட்சித் தலைவர் நிதிஷ்குமார் டில்லியில் நேற்று முன்தினம் கூறியதாவது, பீகார் சட்டமன்ற தேர்தலுக்கு எங்களது தே.ஜ.கூட்டணி முழு வீச்சில் தயாராகி வருகிறது. லல்லுவின் ராஷ்டிரிய ஜனதா தளத்தைச் சமாளிக்க அனைத்துத் திட்டங் களையும் கைவசம் வைத்திருக் கிறோம். இதில் ஒரு முக்கிய வியூகமாக பஸ்வானின் ஐக்கிய லோக்தளம் கட்சியில் இருந்து பிரிந்துவந்த தலைவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் மற்றும் சுயேச்சைகளை தே.ஜ.கூட்டணியில் சேர்த்துக்கொள்ள இருக்கிறோம். அவர்களுக்கு இடம் வழங்கவும் தயாராக இருக்கிறோம்.

புதுமுகங்களுக்குத் தேர்தலில் நிற்க இடம் அளிப்பதால் போட்டி வேட்பாளர் பிரச்சினை எதுவும் எங்கள் கூட்டணியில் ஏற்படாது. தொகுதிகளைப் பிரித்து வழங்குவதில் சிறிய அளவில் சமரசம் செய்துகொள்வோம்.

கடந்த தேர்தலின்போது மிகவும் தாமதமாக பிரசுரத்தைத் தொடங்கி தவறு செய்துவிட்டோம். அந்த தவறை இந்தமுறை செய்யமாட்டோம். கடந்த தேர்தலில் லல்லு - ரப்ரி ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் வாக்காளர்கள் வாக்குப் போட்டார்கள். அந்த வேலை முடிந்துவிட்டதால் இந்தமுறை நல்லாட்சி வேண்டும் என்ற எண்ணத்தில் எங்கள் கூட்டணிக்கு வாக்களிப்பார்கள். பீகார் தேர்தலில் இந்தமுறை தொங்குசட்டமன்றம் அமையாது.. உறுதியாக தே.ஜ.கூட்டணியை அவர்கள் தேர்வு செய்வார்கள். பீகார் சட்டமன்றத்தைக் கலைக்காவிட்டால் மத்தியில் ஆட்சியைக் கலைப்பேன் என்று சோனியாவை லல்லு மிரட்டியதால்தான் தற்போது பீகார் சட்டமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. அது லல்லுவுக்கே தற்போது வினையாக முடிந்திருக்கிறது. பஸ்வான் கட்சி இந்தமுறை கண்டிப்பாக மண்ணைக்கவ்வும். கடந்தமுறை லல்லுவுக்கு எதிரான வாக்குகள்தான் பஸ்வானுக்குக் கிடைத்தது. ஆனால் அவர் அதை ஏற்று லல்லு எதிர்ப்புக் கட்சிகளைச் சேர்த்து ஆட்சி அமைக்க தவறிவிட்டார். இதனால் இந்தமுறை பீகார் மக்கள் பஸ்வானை ஆதரிக்க மாட்டார்கள். பீகார் மாநிலத்தை மேம்படுத்தும் விதத்தில் பொது வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்கி தேர்தலில் அதை முன்வைத்து நாங்கள் வெற்றி பெறுவோம் என்றும் நிதிஷ்குமார் கூறினார்.

# இந்திய மத்திய அமைச்சரவை வெகுவிரைவில் மாற்றப்படும்?

பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான இந்திய மத்திய மந்திரி சபை பதவி ஏற்று கடந்த மாதம் ஓராண்டு முடிந்தது. இதையொட்டி மத்திய மந்திரிகளின் செயறபாடுகள் ஆய்வு செய்யப்பட்டன.இதில்அதிருப்திஅடைந்த மன்மோகன்சிங் மந்திரி சபையை மாற்ற முடிவு செய்துள்ளார்.

அடுத்த வாரம் மந்திரிசபை மாற்றம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அநேகமாக வருகிற ஆறு அல்லது 9 ஆம் திகதி மந்திரி சபை மாற்றம் இருக்கும் என்று தெரிகிறது.

காங்கிரஸ் மூத்த தலைவர்கள் பலருக்கு இந்தத் தடவை முக்கிய துறைகள் ஒதுக்கப்படவுள்ளன. இது தவிர பஞ்சாப், இமாசல பிரதேசம், சத்தீஸ்கர், ஒரிசா மற்றும் கேரளா மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்குக் கூடுதல் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவுள்ளது. எனவே மத்திய மந்திரி சபையில் அமைச்சர்கள் எண்ணிக்கை கணிசமாக உயர வாய்ப்புள்ளது.

மணிசங்கர் ஐயர் உட்பட சிலரிடம் இரண்டு பெரிய துறைகள் உள்ளன. அவை புதியவர்களிடம் பிரித்து வழங்கப்படும் இந்தத் தடவை மந்திரிசபை மாற்றத்தின்போது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே வாய்ப்பு அளிக்கப்படும் என்று டில்லி வட்டாரத்தில் பேசப்படுகிறது.

ஜார்க்கண்ட், முக்தி மோர்ச்சா தலைவர் சிபுசோரன் மீண்டும் மந்திரி சபையில் சேர்க்கப்படுகிறார். பஸ்வாணைச் சமரசம் செய்வதற்காக லல்லுப் பிரசாத்திடம் உள்ள ரெயில்வே துறையை பஸ்வானுக்குக் கொடுப்பார்கள் என்று தெரிகிறது.

கேரளவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஏ.கே அந்தோனிக்கு இராணுவ இலாகா ஒதுக்கப்படும் என்று கூறப்படுகிறது. அதுபோல உள்துறை சிவராஜ் பட்டேலிடம் இருந்து பிரணாப் முகர்ஜிக்கு மாற்றப்படும் என்று தெரிகிறது.

ராகுல்காந்தி மனதில் இடம் பிடித்த சிலருக்கு தனிப்பொறுப்புடன் கூடிய அமைச்சர் பொறுப்பு வழங்கப்படுமென்று தெரிகிறது.

# இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 447 ஓட்டக்குவிப்பு

## இனிங்ஸ் தோல்வியை தவிர்க்க பங்களாதேஷ் போராட்டம்

இங்கிலாந்தின் செஸ்ரர்லீ ஸ்ரீட்டில் நடைபெறும் பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட்போட்டியின் இரண்டாம் நாளில் ரெஸ்கொதிக், இயன்பெல் ஆகியோரின் சதத்தின் உதவியுடன் இங்கிலாந்து அணி மூன்று விக்கெட்டை இழந்து 447 ஓட்டங்களைப்பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இதன் மூலம் இங்கிலாந்து 343 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து பங்களாதேஷ் அணியை துடுப்பெடுத்தாட பணித்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி ஸ்ரீவ் ஹார்மிசன் மற்றும் கோகாட் இருவரினதும் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாது 104 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. ஹார்மிசன் 12.5 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மத்தியு கோகாட் மூன்று விக்கெட்டுக்களையும் ஜோன்ஸ் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். பங்களாதேஷ் சார்பில் யாவிட்ஒமர் மட்டுமே அதிகபட்சமாக 37 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.





பதிலுக்கு தனது முதலாவது இனிங்ஸை ஆடிய இங்கிலாந்து முதல் நாள் ஆட்டமுடிவில் மூன்று விக்கெட் இழப்புக்கு 269 ஓட்டங்களைப்பெற்றது.

ஆரம்பவீரர் ஸ்ரோஸ் எட்டு ஓட்டங்களைப் பெற்றிருந்த போது எல் பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அணித்தலைவர் வோன் 44 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பங்களாதேஷ் சார்பில் மஹ்ரப் மோர்ட்சா இரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இரண்டாம் நாளைத் தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து பெல் 162, தோப் 66 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற பெரிய ஓட்டத்தை எட்டியது.

இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 343 ஓட்டத்தைப் பெறவேண்டிய நிலையில் ஆடும் பங்காளதேஷ் 16 ஓவர் நிறைவில் 97 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

# இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட்

## வலுவான நிலையில் பாகிஸ்தான்

யமேக்காவில் நேற்று முன்தினம் ஆரம்பமான மேற்கிந்தியத்தீவுகள் -பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் பாகிஸ்தான் அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 346 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையிலுள்ளது.



நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடும் பாகிஸ்தான் அணி 42 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் விரைவாக இரண்டு விக்கெட்டுக்களையிழந்த போதிலும் பின்னர் களமிறங்கிய யுனுஸ்கான் சிறப்பாக ஆடி 106 ஓட்டங்களைப் பெற்றதாலும், அணித் தலைவர் இன்சமாம் உல்ஹக்கும், விக்கெட் காப்பாளர் அஸிம்கமலும் பெற்ற அரைச் சதங்களினாலும் அணி 346 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான சொகைப் மாலிக்கும் யசிர் அமிட்டும் முறையே 13,14 என்ற ஓட்ட எண்ணிக்கைகளைப் பெற்றனர்.

மேற்கிந்தியத்தீவுகள் சார்பில் பந்து வீச்சில் கொலி கொலிமோர் 55 ஓட்டங்களைக்கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் கைல், பவல் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முதல் டெஸ்டில் பந்து வீச்சில் பிரகாசித்த பிடல் எட்வர்ட்டுக்குப் பதிலாக சுழற்பந்து வீச்சாளர் டினோ பெஸ்ட் இணைத்துக் கொள்ளப்பட்ட போதும் அவரால் 59 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பெற முடியாமல் போனமை குறிப்பிடத்தக்கது.



## ஆஷஸ் தொடரில் எனது திறமையை மீண்டும் நிரூபிப்பேன் - ஹெய்டன்



ஆஷஸ் தொடரில் எனது திறமையை மீண்டும் நிரூபிப்பேன் என சவால் விடுகிறார் அவுஸ்திரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரர் மத்யூ ஹெய்டன்.

வரும் ஜூலை 21இல் ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் கிரிக்கெட் தொடர் தொடங்குகிறது. இங்கிலாந்து அணி தற்போது நல்ல நிலையில் இருப்பதால் அவுஸ்திரேலிய வீரர்கள் கடுமையான பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர் ஹெய்டன் சமீபகாலமாக தடுமாறி வருகிறார். ஆஷஸ் தொடரை எவ்வாறு சமாளிக்கப்போகிறீர்கள் என்றால் ஹெய்டனிடமிருந்து அமைதியாக பதில் வருகிறது.

2001 ஆஷஸ் தொடரில் என்னால் பெரிய அளவில் ஜொலிக்க இயலவில்லை. அணியில் அப்போது நிரந்தர இடம் எனக்கு கிடையாது. அதனால், துடிப்பாக செயற்பட வேண்டும் என்ற எண்ணத்தில் சில தவறுகளை செய்தேன். இம்முறை எந்த இலக்கையும் மனதில் வைத்துக் களமிறங்க விருப்பமில்லை. ஆஷஸ் தொடருக்கு பெரிய அளவில் முக்கியத்துவம் தரவும் விரும்பவில்லை. இது தேவையில்லாத மன அழுத்தத்தைத் தரும்.

கடந்த சில தொடர்களில் பெரிய அளவில் ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை. எனது இடத்தை அணியில் தக்க வைத்துக் கொள்ள முடிந்த அளவு போராடுவேன். மீண்டும் இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரில் இடம்பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

தொடரின் முடிவில் எடுக்கும் ஓட்டங்கள் பெருமைப்படுத்துவதாக இருக்க வேண்டும். தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கி சாதிப்பது கடினமான ஒன்று. எகிறிவரும் வேகப் பந்துகளை சமாளிப்பது மிகப்பெரிய விடயம். லாங்கருடன் இணைந்து இந்தத் தொடரில் அமைதியாக சாதிப்பேன் என்றார் ஹெய்டன்.

# 2011 உலகக் கிண்ண கிரிக்கெட் இந்தியாவில் நடத்தத் தீர்மானம்



2011 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை இந்தியாவில் நடத்த திட்டமிட்டிருப்பதாக இந்திய கிரிக்கெட் சபைத்தலைவர் ரன்பிர்சிங் மகேந்திரா தெரிவித்துள்ளார்.

இது பற்றி முடிவு செய்ய நீண்ட காலமிருப்பதாக தெரிவிக்கும் அவர் 2011 ஆம் ஆண்டு போட்டிகளை நிச்சயமாக இந்தியாவிலேயே நடத்துவது என்றும், எனினும் 1992 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் இணைந்து நடத்தியதுபோல் இந்தத் தொடரையும் இணைந்து நடத்த விண்ணப்பிக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

1987 ஆம் ஆண்டு இந்தியா, பாகிஸ்தானுடனும், 1996 ஆம் ஆண்டு சிறிலங்காவுடனும் இணைந்து இப்போட்டிகளை நடத்தியது போன்று அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளும் இணைந்து நடத்தலாம் என்று குறிப்பிட்ட மகேந்திரா அதிகமான நாடுகள் ஆசிய பிராந்தியத்தில் இருப்பதாலேயே இங்கு அடிக்கடி போட்டிகள் நடத்தப்படுகிறன என்று கூறியுள்ளார்.

## ஒரு நாள் போட்டியில் டெண்டுல்கருக்காக களமிறங்க தயார் என்கிறார் - காம்பீர்

இந்திய கிரிகெட் அணி யூலை மாதம் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது. இதில் முன்னணி வீரர்கள் டெண்டுல்கர், கங்குலிஆகியோர் இடம்பெற மாட்டார்கள். காயம் காரணமாக டெண்டுல்கரும், தடை காரணமாக கங்குலியும் விளையாட முடியாத நிலையிலுள்ளனர். இதனால் இந்திய அணியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து இந்திய அணி வீரர் கவுதம்காம்பீரிடம் கேட்டபோது; டெண்டுல்கர்-கங்குலி இருவருக்கும் பதிலாக நான் களம் இறங்கத் தயாராக இருக்கிறேன். சேவாக்குடன் தொடக்க ஆட்டக்காரராக இறங்கவும், தயாராக இருக்கிறேன். ஒருநாள் போட்டியில் விளையாடுவது சாதாரண விடயமல்ல வேகமாக ஓட்டம் எடுப்பதும், வேகமாக ஓடவும் வேண்டுமென்று கூறினார்.

## பிரெஞ் ஓபன் டென்னிஸில் இறுதிப் போட்டியில் நடால்- மரியனோ





பிரெஞ் ஓபன் டென்னிஸ் போட்டியின் அரை இறுதி ஆட்டம் ஒன்றில் முதல் நிலை வீரரான ரோஜர் பெடரர், ஸ்பெயின் வீரர் ரபெல் நடாலிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரஞ் ஓபன் டென்னிஸ் போட்டி பாரீசில் நடந்து வருகிறது.

இதில் ஆண்கள் ஒற்றையர் அரை இறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன. மழை காரணமாக ஆட்டம் தாமதமாக தொடங்கியது. முதல் அரை இறுதியில் 12ஆம் நிலை வீரர் மரியனோ புயெர்டா (அர்ஜென்டினா)- நிகொலாய் டேவ்டெங்கோ (ரஷ்யா) ஆகியோர் மோதினர். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் மரியனோ 6-3, 5-7, 2-6, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் நிகோலாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில் முதல் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), நாலாம நிலை வீரர் ரபெல் நடாலை (ஸ்பெயின்) எதிர்கொண்டார். பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் ரோஜர்பெடரர் 3-6,6-4,4-6,3-6 என்ற செட் கணக்கில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். வெற்றிபெற்ற ரபெல் நடால் இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார்.

# கலப்பு இரட்டையர் போட்டி பயஸ் ஜோடி தோல்வி





பிரெஞ் ஓபன் டென்னிசில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட பயஸ், நவரத்திலோவா ஜோடி சம்பியன் வாய்ப்பை நழுவவிட்டது.


நேற்று முன்தினம் நடந்த கலப்பு இரட்டையர் இறுதிப்போட்டியில் ஆறாம் நிலை ஜோடியான பயஸ், அமெரிக்காவின் நவரத்திலோவா ஜோடி, பாப்ரிஸ் சாண்டரோ (பிரான்ஸ்), டேனியலா ஹண்டுகோவாவை (சுலோவாக்கியா) சந்தித்தனர். முதல் செட்டில் பயஸ் ஜோடி வென்றது. ஆனாலும் அடுத்த இரண்டு செட்டில் சாதிக்கத் தவறினார். இவர்கள் 6-3, 3-6, 2-6 என்ற செட்களில் போராடி வெளியேறினர். சம்பியன் பட்டத்தை சான்ட்ரோ, டேனியலா கைப்பற்றினர்.



கலிபோர்னியா மாகாணத்திலுள்ள கார்ல்ஸன் நகரில் பெக்காம் கால்பந்து அகடமி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்த அகடமிக்கு வந்திருந்த இங்கிலாந்து அணித் தலைவர் டேவிட் பெக்காம் சிறுவர்களிடம் தனது திறமையை வெளிக்காட்டுகிறார்.



## சிந்தனைக்கு



பயிற்சி -தந்திரம்- துணிவு இந்த மூன்றும் ஒரு படையணிக்கு அமையப் பெறுமாயின் வெற்றி நிச்சயம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 05-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## குருடன் யானையைப் பார்த்தது போல.....

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஒன்பது கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. இருந்தபோதும் அதில் ஒன்றுக்குக் கூட பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கம் குறித்து எதுவும் தெரியாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் எல்லே குணவன்ச தேரர் குற்றம் சாட்டியுள்ளார்.இவ்வாறு தமது நெருக்கடி நிலையை வெளிப்படுத்துகின்றது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஆனால் இத்தகைய குற்றச்சாட்டைக்கூட முன்வைத்துள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தினர் இவ் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கவில்லை என்பது இங்கு முக்கியத்துவம் மிக்க காரணியாகும். ஆயினும் இக்கட்சியின் பின்னணியில் ஜே.வி.பி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆயினும் ஐ.ம.சு முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் இப் பொதுக்கட்டமைப்புக்குறித்து தமக்கு ஒன்றுமே தெரியாதென அடிக்கடி கூறுவதுண்டு. ஆயினும் இவ் ஒன்பது கட்சிகளில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட சில கட்சிகள் அனைத்தையும், ஜே.வி.பி.உள்ளடக்கிய கட்சிகள் எதிர்ப்பவையாகவும் உள்ளன.

ஆனால் தற்போது எமது தரப்பில் எழும் கேள்வியானது ஐ.ம.சு முன்னணி அரசாங்கத்திலுள்ள கட்சிகள் பொதுக்கட்டமைப்புக் குறித்து தமக்கு எதுவுமே தெரியாதெனக் கூறிக்கொண்டு அதனைஆதரிப்பதும், எதிர்ப்பதும் எவ்வாறெனபதே. அதாவது யானையைப் பார்த்த குருடன் போன்றதாகவே இவர்களின் செயற்பாடுகள் உள்ளதா? என்பதே ஆகும்.

ஏனெனில் பொதுக்கட்டமைப்புக் குறித்த சரத்துக்கள் தெளிவாகத் தெரியாது உள்ளபோது எவ்வாறு போராட முடியும? அதற்கு எவ்வாறு எதிர்ப்புத் தெரிவிக்க முடியும?.

பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கம் குறித்து சனாதிபதி சந்திரிகா எதனையும் பகிரங்கமாகத் தெரிவிக்காது விட்டாலும் இப்பொதுக்கட்டமைப்பு ஒரு அதிகாரஅலகு அல்ல என்பதை பல தடவைகள் வலியுறுத்தி வந்துள்ளார். அதாவது பொதுக்கட்டமைப்பு மூலம் விடுதலைப்புலிகள் நிர்வாக அதிகாரங்கள் எதனையும் பெற்று விடப்போவதில்லை என்பது நோக்கத்தக்கதாகும்.

இந்நிலையில் பொதுக்கட்டமைப்பு நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், இறைமைக்கும் ,அச்சுறுத்தலானதாக எவ்வாறு அமையமுடியும்? இத்தகையதொரு அமைப்பை எதிர்த்து தமிழ்மக்களல்லவா போராட்டம் நடத்த வேண்டும்.

ஏனெனில் அதிகாரங்கள் எதுவுமற்ற ஓர் அமைப்பு என்னும் போது இவ்வமைப்பின்பயன்என்ன? என்ற கேள்வியை எழுப்பும் அவசியம் எழுகின்றது. ஆனால் தமிழ் மக்களோ அன்றி விடுதலைப்புலிகளோ அவ்விடயத்தில் பெரும் அக்கறை எதனையும் காட்டவில்லை. பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் போதும் என்ற நிலையிலேயே உள்ளனர்.

இவ்வாறானதொரு நிலைப்பாட்டுடன் செயற்படுவதற்குக் காரணங்களும் இல்லாமலில்லை. அதாவது தமிழர் தரப்பைப் பொறுத்து தற்பொழுது அரசியல் அதிகாரங்களுக்கு முன்னர் முதன்மை பெற்றதாக சுனாமி அனர்த்த மீள் கட்டுமானப்பணி உள்ளது. இதன் மூலம் மக்களுக்கு நிவாரணப்பணிகளை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

அடுத்ததாகப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுதல் என்பது சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு உதவும் என்பது. அதாவது இருதரப்பும் இணைந்து செயற்படுதல் மூலம் பரஸ்பரம் நல்லுறவைக் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கையாகும். அதாவது சமாதான முயற்சிகளுக்கு அடித்தளமாகும் என்ற நம்பிக்கையாகும்.

ஆனால் அதிகாரம் எதுவுமற்றதென்பது மட்டுமே வெளிப்பட்ட பொதுக்கட்டமைப்புக் குறித்தே சிறிலங்காப் பேரினவாதக்கட்சிகள் கூச்சலிடுகின்றன. அன்றி குழப்பம் விளைவிக்கின்றன. அதாவது இனவாதக் கட்சிகள் தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகள் வழங்கப்படக்கூடாது எனக் கூச்சலிடுவது சரியென வைத்துக்கொண்டாலும் எதற்குக் கூச்சலிடுகின்றோம் என தெரியாமலேயே கூச்சலிடுவது சிறுபிள்ளைத்தனமானதாகும். ஆனால் பொதுக்கட்டமைப்பிற்கு எதிராய் போராடுவதற்கு முன்பதாக அவை பொதுக்கட்டமைப்பிலுள்ளவற்றை வெளியிடுமாறு கோரிப் போராட்டம் நடத்தினால் சிறந்ததாக இருக்கும்.

# விடுதலைப்புலிகளால் சந்திரிகாவுக்குஆபத்து இல்லை

# ஜே.வி.பியினராலேயே அவருக்கு ஆபத்து உண்டு

## எதிர்க்கட்சித் தலைவர். ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

சந்திரிகா தனது உயிரைப் பணயம் வைத்தேனும் விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொது கட்டமைப்பொன்றுக்கு கையெழுத் திடப்போவதாகக் கூறுகிறார். அப் படியானால் விடுதலைப் புலிகளால் சந்திரிகாவின் உயிருக்கு எந்த ஆபத்தும் வராது. ஜே.வி.பி.யினராலேயே அவரின் உயிருக்கு ஆபத்து உண்டு என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பலஹெருவல என்ற இடத்தில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்..

பொதுக்கட்டமைப்பு தொடர்பாகவே இன்று நாடு முழுவதும் பேசப்படுகின்றது. ஊடகங்களிலும் பெரும்பாலும் இதைப்பற்றியே செய்திகள் வெளியாகின்றன. பொதுக்கட்டமைப்பு எப்போது வருமென மக்கள் கேட்கின்றனர். பொதுக்கட்டமைப்பிற்கு ஜே.வி.பி.யினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். பொதுக்கட்டமைப்பில் சனாதிபதி கைச்சாத்திட்டால் அரசில் இருந்து விலகுவோம் என்றும் கூறுகினறார்கள். விடுலைப்புலிகளில் இருந்த பிரிந்து சென்ற கருணா குழுவினர் படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதனால் அவர்களால் சனாதிபதிக்கு தீங்கு ஏற்படாது. விடுதலைப் புலிகளாலும் சனாதிபதியின் உயிருக்கு தீங்கு ஏற்படாது, அப்படியானால் யாரால் தீங்கு ஏற்படும்?

தனது கணவன் விஜேய குமாரண துங்காவை ஜே.வி.பி.யினரே படுகொலை செய்ததாகசனாதிபதி கூறுகினறார். சனாதிபதி ஜே.வி.பி.யினருக்கு எதிராக கூறியிருக்கும் இந்தக் குற்றச் சாட்டை ஜே.வி.பி.யினரும் மறுக்கவில்லை. இந்தப் பின்னணிகளை நோக்கும் போது சனாதிபதிக்கு ஜே.வி.பி.யினரால் தீங்கு ஏற்படுமோ?என்ற கேள்வி எழுகின்றது.

இன்று ஜே.வி.பி.யினர் ஒன்றைக் கூறிவருகின்றனர். சனாதிபதியோ இன்னொன்றைக் கூறிவருகின்றார். இதனால் மக்கள் குழப்பமடைந்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி 2001 டிசம்பர் மாதம் 5ஆம் திகதி ஆட்சிக்கு வந்த பின்னர் மேற்கொண்ட சமாதான நடவடிக்கைகளால் வடக்கு கிழக்கு மட்டுமல்ல தென்பகுதிகளிலும் விவசாயம் வளர்ச்சி கண்டு நெல் விளைச்சல் அதிகரித்திருந்தது.இன்று அத்தி யாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இவற்றைக்கண்டு ஆட்சியாளர்கள் மௌனமாக இருக்கின்றார்கள். பொருட்களின் விலை அதிகரித்துக்கொண்டு போவதை ஏன் அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை? கடல்கோளால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு நிவாரணங்கள் வழங்கப் படவில்லையென வீதிகளில் போராட்டம் நடத்துகின்றனர் என அவர்மேலும் தெரிவித்தார்.

# பிந்துனுவெவ படுகொலை விசாரணை அறிக்கையை

# சனாதிபதி சந்திரிகா பகிரங்கப்படுத்தவேண்டும்!

## மனித உரிமைகளுக்கான ஆசிய மையம்

(கொழும்பு)

பிந்துனுவெவ படுகொலைகள் தொடர்பாக விசாரணை அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு மனித உரிமைகளுக்கான ஆசிய மையம் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவை கேட்டுள்ளது.

இந்தியாவுக்கான சிறிலங்கா தூதரகத்திடம் கையளித்துள்ள அறிக்கை ஒன்றிலேயே மனித உரிமைகளுக்கான ஆசிய மையம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

பிந்தனுவெவ படுகொலையுடன் தொடர்புடையவர்கள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டமை குறித்தும் பெரும் கவலை வெளியிட்டுள்ள மனித உரிமை மையம் இந்தப் பாரிய படுகொலைகளுடன் தொடர்புடையவர்களில் என ஒருவரேனும் குற்றவாளியென இனங்காணப்படாமையானது, இலங்கையின் சனநாயக அமைப்புகள் குறித்த தமிழ் மக்களின் சந்தேகங்களை மேலும் அதிகரிக்கும் எனவும் அம் மையம் மேலும் தெரிவித்துள்ளது.

# சிறிலங்கா-பாகிஸ்தான் வர்த்தக ஒப்பந்தம்

# இம்மாதம் 12ஆம்திகதி முதல்அமுல்

(கொழும்பு)

சிறிலங்காவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையேயான தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் இம் மாதம் 12ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற பாகிஸ்தான் ,சிறிலங்காகூட்டு பொருளாதாரக் குழுவின் கூட்டத்திற்குப் பின்பு இம் முடிவு அறிவிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம் தொடர்பான ஆவணங்களை சிறிலங்கா அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே பாகிஸ்தான் அமைச்சர் ஹமாயூன்அக்தர் கான் ஆகியோர் பரிமாறிக்கொண்டனர்.

இக்கூட்டத்தில் இருதரப்பு தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு குறித்துவிவாதிக்கப்பட்டது. விவசாயம், தோட்டக்கலை, உணவு பதப்படுத்தல் ஆகியதொழில்களில் முழு ஒத்துழைப்பு அளிக்க பாகிஸ்தான் உறுதியளித்தது. மேலும் மனித வள மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம், கல்வி மற்றும் துறைமுக -கப்பல் போக்குவரத்துத்துறைகளில் இருதரப்பினரும் இணைந்து செயற்படவும் தீர்மானிக்கப்பட்டது.

தடையில்லா வர்த்தகத்தைச்செயல்படுத்துவதன் ஒரு பகுதியாக இரு நாட்டுக்கும் இடையே யான கப்பல் போக்குவரத்துகுறித்தும் இக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம்மூலம் சிறிலங்காவின் தேயிலை ,இறப்பர், தென்னை உள்ளிட்ட 206 பொருட்களுக்கு பாகிஸ்தானில் வரி விலக்கும், பாகிஸ்தானின் தோடம் பழங்கள், பாசுமதி அரிசி , பொறியியல்துறை பொருட்கள் உள்ளிட்ட 102 பொருட்களுக்கு சிறிலங்காவில் வரிவிலக்கும் அளிக்கப்படுகின்றன. (32)

# இன்றைய உலக சூழல் தினத்தில் அனைவரும்

# பார்த்தீனியம் செடியைஅழிக்க முன் வருக

## - யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை

உலக சூழல் தினமாக இன்று யாழ். குடா நாட்டில் பரவலாக காணப்படும்பார்த்தீனியம்செடியை ஒழிக்க முன்வருமாறு யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையினர்வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

இந்தியஇராணுவம் எம்மை ஆக்கிரமித்த காலப்பகுதியில் இந்திய இராணுவம் உணவுக்காக இந்தியாவில்இருந்து தருவித்த கால்நடைகளுடன் சேர்ந்து ஊடுருவிய பார்த்தீனியம் விதைகள் இங்கு பெரும் களைச்செடிகளாக பெருகி வருவது குறிப்பிடத்தக்கது. இதனை வெறும் களைதானே எனறு ஒதுக்கிவிடுவதற்கில்லை.இவை ஏனைய களைகளை விடவும் மிக வேகமாகப் பரவக்கூடியவை. எமது உணவாதாரப் பயிர்களுக்குத் தேவையான நீரை , பசளைகளை மேலாக மண்ணில் உறங்கும் நிலையில் இருந்து முளைக்கக் கூடியவை.

பார்த்திருக்கப் பரவும் பார்த்தீனியத்தை வேரோடு களைந்து எரித்து அழிப்பதன் மூலம் மட்டுமே எமது தாயகத்தில் பார்த்தீனியத்தால் ஏற்படக்கூடிய சூழற்பேரழிவைத் தவிர்த்திட இயலும்.

உலக சூழல் தினத்தை முன்னிட்டு தேசிய எழுச்சிப்பேரவையின் சூழல் பாதுகாப்பு பிரிவினர் யாழ்ப்பாண குடா நாட்டில் பரந்தளவில் சூழல் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் அதே சமயம் பார்த்தீனியம் அதிகமாக உள்ள இடங்களில் அதனை அழிக்கவும்திட்டமிட்டு உள்ளனர்.இப் பணிகளில் பெருமளவில் பொதுமக்களையும்பங்கு கொண்டு எமது தேசத்தின் வளமான சுற்றுச்சூழலை இப்போதே உறுதிசெய்து கொள்ளுமாறு தேசிய எழுச்சிப் பேரவையின் சூழல் பாதுகாப்புப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# தமிழக ஓவியர் புகழேந்தி அவர்களுக்கு

# கிளிநொச்சியில் கௌரவிப்பு நிகழ்வு



(அலுவலக செய்தியாளர்)

தமிழகத்தில் இருந்து தமிழீழத்திற்கு வருகை தந்துள்ள புகழ்மிக்க ஓவியர் புகழேந்தி அவர்களுக்கு கிளிநொச்சியில் நேற்று கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

ஓவியக் கலைபற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும் வெளிப்படுத்தி அனைவரையும் விழிப்படையச் செய்ததுடன், தமிழீழத்தில் ஓவியக் கலை புத்துயிர் பெற உழைத்துவரும் ஓவியர் புகழேந்தி அவர்களை கிளிநொச்சி நுண்கலைக்கல்லூரி கௌரவித்துள்ளது.

பிற்பகல் 4.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமானது.

இதில் தமிழீழத் தேசியக்கொடியை கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் ஏற்றிவைத்தார். பொதுச் சுடரை நிதர்சனம் நிறுவனப் பொறுப்பாளர் சேரலாதன், தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து மேடை நிகழ்வுகள் ஆரம்பமானது.

தலைமை உரையைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் சிறப்புரை ஆற்றினார். அடுத்து கிளி. அழகியல் கலாமன்றத்தால் ஓவியர் புகழேந்தி அவர்களுக்கு வழங்கப்பட்ட கௌரவ நினைவுப் பரிசினை கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் அணிவித்து ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து மதிப்பீட்டுரையினை எழுத்தாளர் நிலாந்தன் வழங்கினார். பதிலுரையை ஓவியர் புகழேந்தி வழங்கினார். இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள், ஆர்வலர்கள் எனப் பெருந்தொகையானவர்கள் கலந்து கொண்டனர். (லோ,தீ)

# திருமலை புத்தர்சிலை விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்பை செயற்படுத்துக!

### –தேசிய சமாதானப் பேரவை வேண்டுகோள்

(திருமலை)

திருமலை திடீர் புத்தர் சிலை விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்பைச் செயற்படுத்துமாறு சிறிலங்கா அரசுக்கு தேசிய சமாதானப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில்;

ஆழிப்பேரலை மீளமைப்பு குறித்து கடந்த இரண்டு மாதங்களாக விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் பொது கட்டமைப்பு முயற்சியை சீர்குலைக்கும் வகையில் திருமலையில் அனுமதியின்றி திடீர் புத்தர்சிலை வைக்கப்பட்டது. இதையடுத்தே தமிழர் தாயகப் பிரதேசம் முழுவதும் முழு கதவடைப்பு உள்ளிட்ட போராட்டங்கள் நடத்தப்பட்டு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அரசியல் நோக்கங்களுக்காக மதச் சின்னங்களைப் பயன்படுத்தி அவற்றை அவமதிக்கக்கூடாது. அதை பெரும்பான்மைச் சமூகத்தின் ஒரு அடையாளமாகவும் பாவிக்கக்கூடாது. பன்மைச் சமூகமாக இருக்கும் இலங்கையில் இதை அனுமதிக்கக்கூடாது. திருமலை திடீர் புத்தர்சிலை விவகாரத்தில் நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்பை எவ்வித பாரபட்சமுமின்றி அரசு செயற்படுத்த வேண்டும். வன்முறை மூலம் இப் பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம் என்பது போன்ற அச்சுறுத்தல்கள் குறித்து நாம் மன வருத்தமடைகிறோம்.

அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சுமூகமான அமைதி வழித் தீர்வை அனைத்து சமூகம் மற்றும் மதத் தலைவர்களும் மேற்கொள்ள வேண்டும். அதேநேரத்தில் கொழும்பிலும் வடக்கு கிழக்கிலும் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் படுகொலைகள் குறித்தும் நாம் கவலை கொள்கிறோம்.

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு தொடர்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்டு வரும் முயற்சிகளை நாம் வரவேற்கிறோம். இருப்பினும் ஆளும் அரசுக்குள்ளேயே இது தொடர்பான முரண்பாடுகள் இருப்பது குறித்து நாம் கவலையடைகிறோம்.

நாடு தற்போது முக்கியமான கட்டத்தில் இருக்கிறது. சிறிலங்கா அரசும், தமிழீழ விடுதலைப்புலிகளும் அமைதிப் பேச்சுக்களை நடைமுறையில் செயற்படுத்த முன்வர வேண்டும். இதற்கு முதல் படியாக இந்தப் பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டும் இது குறித்த குற்றச்சாட்டுகளை அனைத்துத் தரப்பினரும் தவிர்த்துவிட்டு இவை தொடர்பாக மக்களிடம் நம்பிக்கையைப் பெறும் வகையில் விளக்கம் அளிக்கும் பணியில் ஈடுபட வேண்டும் அனைத்துத் தரப்பினரதும் முயற்சியிலான அமைதிப் பேச்சுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். என்று சமாதானப் பேரவை விரும்புகிறது என்று அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இந்திய...

பின் இங்கு பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளின் அடிப்படையில் எனக்கு ஏற்பட்ட கவலையினை நான் மன்மோகன் சிங்கிடம் பகிர்ந்து கொண்டேன். அது சம்பந்தமான ஒரு விரிவான கடிதம் ஒன்றையும் அவரிடம் கொடுத்திருக்கிறேன்.

இந்தியாவுடன் கூட்டு இராணுவ ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ள சிறிலங்கா அரசு முயன்று வருகிறது. அதற்காக மிகவும் [illegible]வறான தகவல்களை அது பரப்பி [illegible]ருகிறது. விடுதலைப்புலிகளிடம் விமானங்கள் இருப்பதாகவும், அது இந்தியாவிற்கு பாதுகாப்பிற்கு ஆபத்து என்பதைப் போன்ற செய்திகளை எல்லாம் சிறிலங்கா அரசு பரப்பத் தொடங்கி இருக்கிறது.

விடுதலைப்புலிகளிடம் அப்படி [illegible]ங்கள் இருந்தாலும் அது இந்தியாவிற்கு எதிராக அதன்பாதுகாப்பிற்கு எதிராக பயன்படுத்தப்பட மாட்டாது.

அதே நேரத்தில் சிங்கள அரசு பாகிஸ்தான் அரசிடமிருந்தும், சீனாவிடமிருந்தும் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான ஆயுதங்களை வாங்கிக் குவிக்கிறது. தவிர்க்க முடியாத காரணத்தால் ஒரு வேளை விடுதலைப்புலிகளுக்கும் அரசிற்கும் மீண்டும் மோதல் ஏற்படுமானால் எந்த விதமான இராணுவ உதவியையும் இந்தியா செய்தாலும் அது ஈழத் தமிழர்களுக்கு எதிராக சிறிலங்கா அரசு செய்கின்ற இராணுவத் தாக்குதலுக்கு உதவுவதாகவே போய் முடியும்.

ஆகவே இந்தியா எந்தவிதத்திலும் சிறிலங்காவுக்கு இராணுவ உதவி செய்யக்கூடாது என்று இந்தியப் பிரதமரிடம் கேட்டுக்கொண்டேன்.

இலங்கைத்தமிழர்கள் அதிலும் விடுதலைப்புலிகள் இந்திய அரசோடு நல்லுறவையே விரும்புகிறார்கள். எந்த விதத்திலும் இந்தியாவினுடைய நலனுக்கு விரோதமாக அவர்கள் செயற்பட மாட்டார்கள் என்பதையும் அவரிடம் குறிப்பிட்டேன்.இவை அனைத்தையும் பொறுமையாகக் கேட்ட பிரதமர் மன்மோகன்சிங் அவர்கள் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

ஆகவே அவர் எனக்குப் பதிலளித்த விதத்திலிருந்து எனக்கு மிகுந்த மனத்திருப்தி ஏற்பட்டுள்ளது.

இந்தியா சிறிலங்கா அரசிற்கு இராணுவ உதவிகள் வழங்கி வருவதாகவரும் செய்தியை மன்மோகன் சிங் மறுத்துரைத்தார்.

ஈழத்தமிழர்களை பாதிக்கின்றதான சிறிலங்கா அரசின் இராணுவ பலப்படுத்தல்களுக்கு உதவக்கூடாதென நான் மன்மோகன் சிங்கிடம் தெரிவித்தேன் அவரும் இதனை ஏற்றுக் கொண்டார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எழுத்தாளர் பேராசிரியர் நந்தி நேற்றுக் காலமானார்



(யாழ்ப்பாணம்)

பேராசிரியரும் பிரபல எழுத்தாளருமான செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் நேற்றுக் காலமானார். புற்றுநோயினால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் காலமானார். (சு)

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை நாளை முதல் ஆரம்பம்

(புதுக்குடியிருப்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை நாளை ஆரம்பமாகின்றது. முல்லை. மாவட்டத்தில் பத்து நிலையங்களில் இப்பரீட்சை இடம்பெறுவதாக முல்லை.வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இப் பத்து பரீட்சை நிலையங்களுக்கு ஆறு இணைப்பு நிலையங்கள் இயங்கவுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (08)

# வட்டக்கச்சியில் உந்துருளி விபத்து; இளைஞர் ஒருவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

வட்டக்கச்சியில் நேற்றுக்காலை 8.15 மணிக்கு வீதியிலுள்ள பள்ளத்தில் உந்துருளி வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். உந்துருளி பலத்த சேதமடைந்துள்ளது.

வட்டக்கச்சி கட்சன் வீதியில் இருந்து சந்தையடி நோக்கிச் சென்றுகொண்டிருந்த உந்துருளி வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதிக்குக் குறுக்காக மழைநீர் ஓடி அரித்துக் காணப்பட்ட பள்ளத்தில் விழுந்ததாலேயே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

வட்டக்கச்சியைச் சேர்ந்த ஜெககப்-ஜெயரூபன் (வயது-26) என்பவரே படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு ஆதாரவைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (சு, 12)

## தமிழீழ...

திலீபன் மருத்துவமனையின் முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றது. இந்நிகழ்வில் வைத்தே இந்த நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

போராளி மருத்துவர் பண்பரசன் இந்நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

திலீபன் மருத்துவமனையில் பணிபுரியும், வைத்தியர்கள், தாதிகள் மற்றும் பணியாளர்களின் சேவைகளைக் கௌரவிக்குமுகமாக அவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் திலீபன் மருத்துவமனை அபிவிருத்திக்குழு ஆகியவற்றினால் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (25)

## கல்முனை...

இதனையடுத்து அம்பாறையிலுள்ள பௌத்த விகாரையொன்றிலிருந்து இரண்டரை அடி உயரமான புத்தர் சிலை கொண்டுவரப்பட்டு தற்போது அந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு தற்போது பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

## புலிகளின்...

கிறார். விடுதலைப்புலிகள் வான் படைத்திறனை வளர்த்துக் கொண்டுள்ளதையடுத்து இலங்கை அரசும் அதை எதிர்கொள்ள விமான எதிர்ப்பு வசதிகளை வளர்த்துக் கொள்ள வேண்டியிருக்கும். இது தேவையற்ற போட்டியை, மோதல் போக்கை ஏற்படுத்திவிடும்.

எனவே, அமெரிக்காவும் ஏனைய முக்கிய நாடுகளும் விடுதலைப்புலிகளை வற்புறுத்த முன்வரவேண்டும். விடுதலைப்புலிகளினுடைய வான் படைத்திறனைக் களைய முன்வர வேண்டும். அதை உறுதி செய்ய வழி வகுக்க வேண்டுமெனவும் கதிர்காமர் கோரியுள்ளார்.

## தேசியத்...

ஏற்ப எமது மாணவர்களுக்கு ஆங்கில மொழி அவசியமானது இதனை மேம்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆங்கில மொழிப் பயிற்சி நிறுவனத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் திறம்பட வழிநடத்தியுள்ளது எனவும் குறிப்பிட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இந்த நிறுவனத்தை எமது மாணவர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் நளன் தலைமையில் முற்பகல் 11.00 மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக்கழக மண்டபத்தில் நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வாக அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழகச் சமூகவியல் பேராசிரியர் சண்முகலிங்கம், அவுஸ்திரேலியாவில் வசிக்கும் விக்னேஸ்வரன் ஆகியோர் ஈகச்சுடர் ஏற்றினர்.

தமிழர்புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப்பணிப்பாளர் கே.பி றெஜி இந்நிகழ்வில் உரையாற்றினார்.

அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்களையும், பரிசில்களையும் வழங்கிக்கௌரவித்தார். நிர்வாக உத்தியோகத்தர் செல்வி நளாயினி நன்றியுரை வழங்கினார்.

**சுற்றாடல் தினம் - ஜூலை05**

**இயற்கை வளமே இன்பத்தின் நிறைவு!**
**இயற்கையை அழித்தால் துன்பம் பெருகும்!!**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது